உ
சிவமயம்

# சைவநீதி
SAIVANEETHI



மலர் 20 | துர்முகி ஆடி - புரட்டாதி | 2016-July - Sept. | இதழ் 4-5-6




மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

இவ்விதழ் வெளிவர அனுசரணை
பொறியியலாளர், அரிமா.
சண். குகவரதன்
மேல்மாகாண சபை உறுப்பினர்
கொழும்பு மாவட்டம்



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கிழக்கு வாயில்

# பொருளடக்கம்



| | |
|---|---|
| இறைவன் விதித்த அறச்செயல்கள் | 02 |
| உயிர்கள் அனுபவித்தற்குரிய சரீரங்கள் | 03 |
| உயிர்கள் இலக்கணம் | 04 |
| தில்லைவாழ் அந்தணர் | 05 |
| விநாயகரின் நாமங்களும் அதற்கான காரணங்களும் | 06 |
| திருவீழிமிழலை | 07 |
| திரு அஞ்சைக்களச் சிவத்தலமும் திருமுறையும் | 08 |
| காணாதே போதியோ? | 11 |
| சைவப்புலவர் பரீட்சைப் பெறுபேறுகள் | 13 |
| திருக்குறட் கதைகள் | 14 |
| யாப்பிலக்கணம் (வினா-விடை) | 18 |
| சைவசமயம் - மாணவர் அறிவுப் பெட்டகம்(வினா-விடை) | 23 |
| நடப்பு ஆண்டு புதிய உத்தியோகத்தர்கள் | 25 |
| தென்னிந்திய திருத்தல யாத்திரை | 26 |
| அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம் | 31 |
| காலத்தால் முந்திய சித்தாந்த சாத்திரம் | 35 |
| நினைவிற் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள் | 39 |

உ

சிவமயம்

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# சைவநீதி



மலர் 20 துர்முகி ஆடி, ஆவணி, புரட்டாதி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 4, 5, 6

**தொடக்குனர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார்** M.A.

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 4A, 1st Lane,
Ratmalana.
Tel: 0779 008 286

## உற்சவம்

நாம் வணங்கி இம்மை, மறுமைப் பேறுகளைப் பெற்றுக்கொள்ள என இறைவன் எழுந்தருளி அருள் புரியும் இடம் ஆலயம். "ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்பது சிவஞானபோதம்.

ஆலயத்திலே நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற வேண்டும். நித்திய பூசையில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்வது நைமித்தியபூசை. நைமித்தியபூசையில் மகோற்சவமும் அடங்கும். வருடத்தில் ஒருமுறை கொடியேற்றம் முதல் தீர்த்தத் திருவிழா வரையான உற்சவங்கள் மகோற்சவம் அல்லது பிரம்மோற்சவம் எனப்படும். இவ் உற்சவம் பத்து, பன்னிரண்டு, பதினைந்து, பதினெட்டு, இருபத்தைந்து அல்லது இருபத்தேழு நாள்கள் ஆலயத்தின் வசதிக்கேற்ப நடைபெறும்.

இருபத்தேழுநாள் திருவிழா ஓர் உயர்ந்த தத்துவத்தை எமக்கு உணர்த்துகின்றது. நட்சத்திரங்கள் இருபத்தேழு ஆனை முதல் எறும்பீறாக உள்ள அனைத்து உயிர்களும் ஏதோஒரு நட்சத்திரத்திலே பிறந்திருக்கும். அந்தந்த நட்சத்திரத் திருவிழா வன்று அந்த நட்சத்திரத்திலே பிறந்த உயிர்களுக்கு இறைவன் அனுக்கிரகம் கிடைத்துக் கொள்ளும். அனைத்து ஜீவராசிகளுக்கும் இறைவன் அருள் கிடைப்பதற்கு இந்த இருபத்தேழுநாள் திருவிழா நடைபெறும்.

திருவிழாவில் இறைவன் வீதியுலா வருவார். ஆலயத்துட் சென்று தரிசிக்க முடியாதவர்கள், பறவைகள் முதலான ஜீவராசிகள் உலாவரும் இறைவனைத் தரிசித்துப் பயன் பெறும் நோக்கிலே வீதியுலா இடம்பெறும். நிலத்து ஜீவராசிகள் இவ்வாறு பயன் பெறுவது போலத் தெப்பத்திருவிழா அன்று இறைவன் குளம், கடல் போன்ற நீர் நிலைகளுக்கு எழுந்தருளுகிறான். இவ் வேளை நீர்வாழ் ஜீவராசிகள் இறையனுக்கிரகம் பெற்றுக் கொள்ளும்.

அடியவர்கள் ஆசார சீலராக ஆலயத்திற்குச் சென்று இறைவனைத் தரிசித்து இகபர சௌபாக்கியம் பெறவேண்டும்.

## உயிர்கள் வாழும்போது கடைப்பிடிக்க வேண்டிய நல்வினைகள் இறைவன் விதித்த அறச்செயல்கள்.

**சித்தியார் : 113**

**"ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம்,**
**வழுக்கிலாத் தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை,**
**அழுக்கிலாத் துறவு, அடக்கம், அறிவொடு அர்ச்சித்தல், ஆதி**
**இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணியறங்கள்."**

1. ஒழுக்கம் - உயர்ந்த பண்புடையவரோடு பொருந்த நடப்பது.
2. அன்பு - யாவரிடத்தும் அன்புடைமை.
3. அருள் - உயிர்களிடத்தில் கருணையுடைமை.
4. ஆசாரம் - வேதாகமங்களில் விதித்தவாறு கடைப்பிடித்தல்.
5. உபசாரம் - தக்கோரிடத்துச் செய்யும் உபசரிப்புடைமை.
6. உறவு - யாவரிடத்தும் நண்புடைமை.
7. சீலம் - நற்குணம் உடைமை.
8. வழுக்கில்லாத்தவம் - புலனடக்கம், விரதம் முதலிய குற்றமற்ற தவம்.
9. தானங்கள் - தக்கோர்க்கு உவகையோடு செய்யும் தானம்.
10. வந்தித்தல் - தன்னிலும் மூத்தவர்களை வழிபடுதல்.
11. வணங்கல் - யாவரிடத்தும் பணிவுடைமை.
12. வாய்மை - மெய்ம்மை உடைமை.
13. அழுக்கிலாத்துறவு - குற்றமற்ற ஆண்தகைமைத் துறவு.
14. அடக்கம் - தீயவழிச் செல்லாத அடக்கமுடைமை.
15. அறிவு - தக்கநிலை தகாதநிலை எனப்பகுத்தறிவது.
16. அர்ச்சித்தல் - குலதெய்வத்தைப் பூசை செய்து வழிபடல்.

# பூமி, நரகம், சுவர்க்கம் ஆகிய உலகங்களில் உயிர்கள் அனுபவித்தற்குரிய சரீரங்கள்

## சூக்கும சரீரம்

படைப்புக்காலம் முதல் சங்கார காலம்வரை உயிரோடு இருப்பது. இது பல தூல உடம்புகள் தோன்றக் காரணமாய் இருப்பது. கருவி கரணங்களுக்குத் தெரியாதது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரைகளாகிய பூதமூலங்கள் ஐந்தும் மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றுமாக எட்டோடும் கூடி இருப்பது. ஆதலால் இது புரியட்டகாயம் எனப்படும். உடம்புக்குள் சூக்கும சரீரத்துடன் இருக்கும் உயிர உடம்பு இறந்ததும் வெளியேறிப் பின் தன்வினைப் பயனுக்கேற்ப வேறு உடல்களைப் பெறும்.

## தூலசரீரம் - பூமியில் வாழ்வது.

பஞ்ச பூதங்களும் ஒன்று பிறிதொன்றாகப் பரிணமித்து உருவாவது. இதுவே எங்கள் உடம்பு. இது பூத சரீரம், பூதனா சரீரம், ஊனுடம்பு என்றும் சொல்லப்படும். இதற்குள்தான் உயிர் சூக்கும உடலுடன் இருக்கிறது.

## சுவர்க்கத்தில் பூதாசார சரீரம்

பூமியில் பூத உடலில் வாழ்ந்த உயிர் தன் நல்வினைப் பயனைச் சுவர்க்கத்தில் அனுபவித்தற்கு இறைவனாற் கொடுக்கப்படுவது.
பஞ்சபூதங்களின் சாரங்களால் ஆக்கப்பட்டது.

## நரகத்தில் யாதனா சரீரம்

உயிர் பூமியில் பூத உடலில் வாழும் காலத்தில் செய்த பாவங்களின் பயனாய் நரகத்தில் துன்பங்களை அனுபவிப்பதற்கு இறைவனால் கொடுக்கப்படுவது.

(யாதனை - துன்பம்)

**சான்று - சிவஞானசித்தியாரர் 126 ஆம் பாடல்**

பூதனா சரீரம் போனால் புரியட்ட ரூபந்தானே
யாதனா சரீரமாகி இன்ப துன்பங்கள் எல்லாம்
நாதனார் ஆணை உய்க்க நரகொடுசுவர்க்கம் துய்த்து
தீதிலா அணுவாய் யோனி சேர்ந்திடும் சீவன் எல்லாம்.

## உயிர் இலக்கணம்

உயிர்கள் எண்ணில்லாதன; அநாதியாய் என்றும் உள்ளன; இயல்பாகவே ஆணவத்தில் அழுந்தி உள்ளன; தாம் செய்த நல்வினை தீவினைகளுக்குப் பொருத்தமான உடல்களை இறைவன் அருளாலே பெறுவன; அந்த உடல்களைக் கொண்டு இறைவன் ஆணையின்படி தாம் செய்த வினைகளுக்கேற்ற இன்ப துன்பங்களை அனுபவிப்பன. அனுபவிக்கும் போதே புண்ணிய பாவங்களைச் செய்வன; அதற்கேற்ப மீண்டும் இறந்தும் பிறந்தும் இறைவன் அருளால் மல பந்தம் நீங்கப் பெற்ற போது இறைவனின் திருவடிப்பேறு ஆகிய முத்தி இன்பத்தைப் பெறும் என்று பெரியோர் கூறுவர்.

**சான்று : சிவப்பிரகாசம் 19 ஆம் பாடல்**

"எண்ணரிதாய், நித்தமாய், இருள் மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணல் அருளால் நண்ணி, அவை அவராய், அதனால்
அலகில் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்
புண்ணிய பாவம் புரிந்து, போக்குவரவு உடைத்தாய்
புணருமிருண் மலபாகம் பொருந்தியக்கால், அருளால்
உண்ணிலவும் இருள் அகற்றிப், பாதம்
உற்றிடு நல் பசுவர்க்கம், என உரைப்பர் உணர்ந்தே."

## உயிர் தாயின் கருவில் சேருங் காலத்திலேயே அது வாழும் காலம் நிச்சயிக்கப்படுகிறது.

தாயும் தந்தையும் அன்புடன் கூடிப் புணர்ந்து இன்புறும் காலத்தில் தாயின் சுரோணிதமும், தந்தையின் சுக்கிலமும் கருப்பையில் சேர்ந்து உயிர தங்கும் காலத்திலேயே அது பக்குவமடையும் காலத்தையும், பூமியில் வாழவேண்டிய கால எல்லையையும், வாழ்வையும் இறைவன் அன்புறு காலத்தில் அமைத்தான்.

**சான்று : திருமூலர் திருமந்திரம் 453**

"இன்புறு காலத்து இருவர் முன்பு ஊறிய
துன்புறு பாசத்து உயர்மனை, வானுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத்து அமைத் தொழிந்தானே."

உயிர் தந்தையில் இருந்தே தாயின் கருப்பையில் செல்கிறது.

**பெரியபுராணத்தொடர்:-**

## தில்லைவாழ் அந்தணர்

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும். தில்லை மரங்கள் அடர்த்தியாக இருந்ததால் 'தில்லைவனம்' என்பது இத்தலத்தின் பெயர். இத்துணைப் பெருஞ்சிறப்பினதாகிய அந்தத் தில்லை வனத்தின் கண்ணே முன்னைப்பழம் பொருட்கு, முன்னைப்பழம் பொருளாகிய சிவபெருமான் சர்வான்மாக்களுக்கும் அருள்செய்யும் பொருட்டு திருமூலத்தானமாகிய சிவலிங்க வடிவமாய் எழுந்தருளியுள்ளார்.

திருமூலத்தான சிவலிங்கத்திற்கும், சபாநாதருக்கும் வேதசிவாகம விதிப்படி பூசை முதலியவை செய்யும் பிராமணர்கள் தில்லைவாழந்தணர் என்று சொல்லப்படுவார்கள். இவர்கள் தெய்வத்தன்மை வாய்ந்த மூவாயிரவர் எனப்போற்றப்படுவர். அவர்கள் குற்றமிலாத வமிசத்தில் உதித்தவர்கள். ஞானம், தானம், மானம், பொறுமை, தவம் முதலிய எல்லா நற்குணங்களும் இவர்கள்பால் பொருந்தியிருந்தன. பாவங்கள் சிறிதுமில்லாதவர்கள், புண்ணியங்களெல்லாம் திரண்டு வடிவெடுத்தாற் போன்றவர்கள். கிரகத்தாச்சிரமத்தில் ஒழுகுகிறவர்கள். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களையும், சிட்சை, வியாகரணம், சந்தோவிசிதி, நிருத்தம், சோதிடம், கற்பம் எனும் ஆறு வேதாங்கங்களையும், மீமாம்சை, நியாயம், புராணம், மிருதி எனும் நான்கு உபாங்கங்களையும் ஓதியுணர்ந்தவர்கள். காருகபத்தியம், ஆகவனீயம், தக்கனாக்கினியம் என்ற மூன்றக்கினிகளையும் விதிப்படி வளர்க்கின்றவர்கள். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுதொழிலினாலும் கலியை நீக்கியவர்கள். விபூதி, உருத்திராக்கம் என்னும் சிவசின்னங்களை விதிப்படி தரிப்பவர்கள்.

அவர்கள் சமயதீட்சை, விசேஷதீட்சை, நிருவாணதீட்சை, ஆசாரியாபிஷேகம் எனும் நான்கும் பெற்றவர்கள். சைவாகமங்கள் இருபத்தெட்டையும், ஓதியுணர்ந்தவர்கள். நாற்பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றை வழுவாவண்ணம் அனுட்டிப்பவர்கள். சிவபெருமானுடைய திருவடிகளில் பதிந்த அன்பே தங்களது செல்வம் எனக் கொள்கின்றவர்கள்.

தியாகேசர், சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருத்தொண்டர் தொகை பாடும்படி அருளிச் செய்தபோது "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அவர்களைத் தம் அருமைத் திருவாக்கினால் எடுத்துச் சொல்லியருளினார்.

தில்லைவாழ் அந்தணர்களின் பெருமையைச் சேக்கிழார்...

"ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்
தானமும் தவமும் வல்லார் தகுதியின் பகுதி சார்ந்தார்
ஊனமேல் ஒன்றும் இல்லார் உலகெலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறுமையும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார்."

என்று புகழ்ந்து போற்றியுள்ளார்.

சித்தாந்தரத்தினம். பத்மினி ராஜேந்திரா

## விநாயகரின் நாமங்களும் அதற்கான காரணங்களும்

விநாயகர் :- தமக்கு மேலே வேறொரு தலைவர் இல்லாதவர்.

விக்னேஸ்வரர் :- எமக்கு வருகின்ற இடையூறுகளை நீக்குபவர். / விக்கினங்களை நீக்குபவர்.

இலம்போதரன் :- பெருவயிற்றையுடையவர். அதாவது அறிவுக்குப் புலப்படாத பிரபஞ்சம் முழுவதையும் தம்முள் உண்டு அடக்கியவர்.

கணபதி :- கணங்களுக்குத் தலைவர்.

கணேசர் :- மனோவாக்குகளுக்கும், அவற்றைக்கடந்த நிலைகளுக்கும் ஈசன்.

வக்கிரதுண்டர் :- கொடிய மாயையைத் துண்டிப்பவர்.

சித்தி விநாயகர் :- சித்திகளை அருள்பவர்.

சிந்தாமணி விநாயகர் :- கபில முனிவர் கொடுத்த சிந்தாமணியைக் கழுத்திலே அணிந்தவர்.

ஞானாகரன் :- ஞானமே வடிவானவர்; அம்மை அப்பரிடம் ஞானப்பழம் பெற்றவர் என்பதாலும் இப்பெயர் ஏற்பட்டது.

அச்சிறுத்த பிள்ளையார் :- சிவன் தேரிலேறி முப்புரம் எரிக்கச் சென்றபோது தன்னை வணங்காது சென்றதால், அச்சைப் பொடி செய்தார். அதனால் அப்பெயர் ஏற்பட்டது.

சித்தாந்தரத்தினம். பத்மினி ராஜேந்திரா

## அஞ்சலி

சைவநீதி சஞ்சிகைக்கு தொடக்ககாலம் முதல் தொடர்ச்சியாக பல காத்திரமான கட்டுரைகளையும், ஆக்கங்களையும் எழுதி வந்த முருகவேபரமநாதன் அவர்கள் கனடாவில் அமரத்துவம் அடைந்து விட்டார். அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**- சைவநீதி வெளியீட்டுக் குழு -**

# திருவீழிமிழலை

திருவாவடுதுறை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்ட திருத்தலம் இது. திருவாரூர் மாவட்டம் குடவாசல் வட்டத்தில் உள்ள திருக்கோயில். தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்களில் காவிரித் தென்கரையில் அமைந்த 61 ஆவது திருத்தலம். திருமணத் தடைகளை நீக்கித்தன் பெயரையே மாப்பிள்ளை சுவாமி, கல்யாண சுந்தரர் என்னும் பெயர் வைத்து இருக்கும் சிவபெருமான் உறையும் தலம். வீழி நாதர் என்னும் பெயர் வைத்திருக்கும் சுவாமியின் அம்பாள் பெயர் அழகிய மாமுலை அம்மை. 1500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான திருக்கோயில். தேவாரப் பதிகங்களில் அதிக பதிகம் பெற்ற மூன்றாவது தலம். கார்த்யாயனியாகத் தோன்றிச் சிவனை மணந்து மணக்கோலத்துடன் தோன்றும் திருத்தலம். இத்திருக்கோவிலின் விமானம் திருமாலால் கொண்டு வரப்பெற்ற விண்ணிழி விமானம் என்ற சிறப்பை உடையது. அப்பர், சம்பந்தர் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்க “வாசிதீரவே காசு நல்குவீர்” என திருஞானசம்பந்தர் பாடிப் படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்த பெருமைக்குரியது. இத் திருத்தலத்தில் நவக்கிரகங்கள் கிடையாது. சனீஸ்வரனுக்கு மட்டுமே தனிச் சந்நிதி உள்ளது. அப்பருக்கும் சம்பந்தருக்கும் காசு அளித்தது போல் சுந்தரருக்குத் திருஆபரணம் அளித்தவர். ஆறு ருதுக்களைக் காட்ட ஆறு படிகளும், பன்னிரண்டு மாதங்களைக் காட்டப் பன்னிரண்டு படிகளும் உள்ளன.

இங்கே சம்பந்தர் பீடம், நாவுக்கரசர் பீடம், மாணிக்கவாசகர் பீடம் ஆகியன உள்ளன. கருவறையில் லிங்கத்திருமேனியாக உள்ள வீழிநாதருக்கே அபிஷேகம் எல்லாம். கருவறையில் சிலாவடிவில் சிவனும் பார்வதியும் உள்ளனர். அவர்களுக்கு அபிஷேகம் கிடையாது. சந்தனாதித் தைலக்காப்பு மட்டுமே உண்டு. அருகே நந்தி எம்பெருமான் இருக்கிறார். சிவன் சந்நிதி மண்டபம் மணப்பந்தல் போலவே அமைந்துள்ளது. வடகிழக்குத் திசையில் பந்தல் கால் இருக்கிறது. அர்த்த மண்டபத்தில் அரசாணிக்கால் என்னும் முகூர்த்தக்கால் இருக்கிறது. திருமணத் தடை உள்ளவர்கள் அரசாணிக்காலைச் சுற்றி வந்து சிவனை வழிபடுகின்றனர்.

தல வரலாற்றில் திருமால் சக்கராயுதம் பெறும் பொருட்டு தினமும் ஆயிரம் தாமரைகளால் வழிபட்டு வர, ஒருமுறை சிவன் ஒரு மலரை மறையச் செய்தார் என்பதும், திருமால் தன் கண்ணையே ஆயிரமாவது மலராகக்கொண்டு அர்ச்சித்ததால் சிவன் மகிழ்ந்து

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# திருஅஞ்சைக்களச் சிவத்தலமும் திருமுறைகளும்

தேவார முதலிகள் மூவராலும் பாடல்பெற்ற 274 சிவத்தலங்கள் தென் நாட்டில் மட்டுமன்றி அதற்கு வெளியேயும், ஈழத்திலும், வடக்கே இமாலயச் சாரலிலும் பரந்து திகழுமாற்றை ஒரு பாடலில் தொகுத்து தந்துள்ளனர் நம் முன்னோர்.

**பொன்னி வடகரையதனில் அறுபதுடன் மூன்று**
**புகழ்பெறு தென்கரையதனில் நூற்றிருபத்தேழு**
**மன்னிய ஈழத்திரண்டு பாண்டி பதினான்கு**
**மலைநாட்டில் ஒன்று கொங்கில் ஏழு நடுநாட்டில்**
**இன்னியல் சேர் இருபதுடன் இரண்டு தொண்டைநாட்டில்**
**எண்ணான்கு துளுவில் ஒன்று வடக்கில் ஐந்து மூவர்**
**உன்னியருள் பதிகமுறு பதிகள் தொகையுரைக்கில்**
**ஓரிரு நூற் றெழுபத்து நான்காம் என்றுரையே.**

இந்தப் பாடலில் **'மலைநாட்டில் ஒன்று'** எனக் குறிக்கப்பெறுவது திரு அஞ்சைக்களத் தலமாகும். இச் சிவத்தலம் மலைநாட்டுப் பாடல் பெற்ற தனித்தலமாகத் திகழ்கிறது. முடிவேந்தர் மூவரில் ஒருவரான சேர மன்னரின் அரசதானியாக அமைந்திருந்த மகோதையில் உள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய தேவாரப் பதிகத்தில் (பதிக எண் 7.4) இத்தலம் **'மகோதை அணியார் பொழில் அஞ்சைக்களம்'** எனப்படுவதால் இது அங்குள்ள சிவத்தலத்தைக் குறிப்பதாக அமைகிறது.

இச் சிவத்தலம் மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்களைக் கொண்டுள்ளது மட்டுமன்றி சைவத் திருமுறைகளுக்கும் பெருமை சேர்க்கும் தலமாகவும் விளங்குகின்றது. சைவத் திருமுறைகள் அருளாளர்களால் பூவுலகில் இருந்து அருளிச் செய்யப்பட்ட பதிகங்களையும் பிரபந்தங்களையும் மட்டும் கொண்டிருக்கவில்லை; விண்ணுலகத்திலிருந்து அருளிச் செய்யப்பட்ட பதிகத்தையும் உள்ளடக்கியுள்ளன என்பதை காட்சி, ஆகம அளவைகள் மூலம் நிறுவும் சிறப்பினைத் திரு அஞ்சைக்களம் கொண்டுள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார் **"தலைக்குத் தலைமாலை"** (7.4) என அடியெடுத்து **"வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்"** என அஞ்சைக்களத்தப்பரிடம் குறையிரந்து நிற்க திருக்கைலாயத்தில் கைலாய நாதர் அரிபிரமேந்திர தேவர்களை நோக்கி **'ஒன்று சிந்தை நம் ஊரனை'** வெள்ளானையின் உடனேற்றிக் கொண்டு வரவும் எனத் திருவாய் மலர்ந்தருளினார். சுந்தரர் ஐராவதத்தின் மீதமர்ந்து விண்வெளியாகத் திருக்கைலாயம் செல்லும் போது இறைவன் தமக்கருளிய திருவருளின் திறனை நினைத்து உருகித் **"தானெனை முன்படைத்தான்"** (7.100) எனத் தொடங்கும் நொடித்தான்மலைப் பதிகத்தை இசைத்த வண்ணம் கைலாயத்தை அடைந்தார். ஆகாய வெளியில் அருளிச் செய்த இத் திருப்பதிகத்தைப் பூவுலகும் பெற்றுப் பயனடைய வேண்டுமென்னும் பெருங்கருணையினால் **"ஆழி கடலரையா அஞ்சையப்பர்க்கறிவிப்பதுவே"** என வருண பகவானிடம் ஒப்படைக்க அவனும் **"ஊழியிற் றனி யொருவர்தம் திருவஞ்சைக் களத்திலுய்த்துணர்வித்தான்"**(பெரிய புராணம் 4284). இத் திருப்பதிகம் இப்போதும் அங்கு பாடப்பட்டு வருவதைப் பிரத்தியட்சமாகக் காணலாம். நவீன தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் கால்கோள் இங்குதான் நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஏனைய திருமுறைகளுக்கு இல்லாத சிறப்பு பதினோராந் திருமுறைக்குண்டு. திருவாலவாய் இறைவர் இயற்றியருளிய திருமுகப்பாசுரம் (11.1) இத் திருமுறையின் முதலிற் திகழ்வதுடன் சேரமான் பெருமாள் நாயனார் தூல உடம்புடன் கைலையேகி கைலாயநாதர் திருமுன் பாடியருளிய திருக்கைலாய ஞான உலா எட்டாவதாகவும் (11.8) உள்ளது. இவற்றிற்கெல்லாம் களமாயமைந்த தனிச் சிறப்பு மகோதை - அஞ்சைத் தலத்திற்கே உரியதாகும்.

மதுரையில் பாண்டிய மன்னன் அவைக்களத்துப் புலவரான பாணபத்திரனார் சிவபக்தி மிக்கவர். அவர் சிவபெருமான் திருவடிகளைப் பற்றிக்கொண்டு அவைக்களத்தினின்றும் அகன்று இறைவனுக்கு இசைபாடுவதையே நியமமாகக் கொண்டார்.

**"பனிமதி மருமான் கோயிற் பாணிசைக் கிழமை நீத்துக்**
**குனிமதி மிலைந்த நாதன் கோயில் முப்பொழுதும் எய்திக்**
**கனிமதி அன்பின் பாடும் கடப்பாடு நியமம் பூண்டான்"**

எனப் பரஞ்சோதியார் காட்டுகின்றார்.

பாணபத்திரனார் ஆலவாய் அண்ணலுக்கு இசைப்பணி புரிந்துவரும் காலத்து மிகவும் வறுமைக்குள்ளானார். தன்னையடைந்தவர் வினை தீர்ப்பவராகிய பெருமான் அவரது வறுமைப் பிணியையும் தீர்த்தருளத் திருவுளங் கொண்டார். இதனைத் தானாகவே செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாது மகோதையில் ஆட்சி செய்யும் தன் அன்பன் சேரமான் பெருமாளுக்குத் திருமுகம் வரைகின்றார். இதன் மூலம் சேரமானின் வள்ளற்றன்மை, தன் மீது அரசன் வைத்துள்ள பேரன்பு, பாணபத்திரனாரின் வறுமை அரசன் மூலம் நீங்கல் என்பனவற்றை உலகத்திற்கு உணர்த்துதல் இறைவனின் திருவுளமாகும். திருமுகம் சேரமன்னனின் வாரிவழங்கும் வள்ளற்றன்மையை

**"பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு**
**உரிமையின் உரிமையின் உதவி"** எனவும்

அரசனின் அன்பின் பெருமையை **'தன்போல் என்பால் அன்பன்'** எனவும், அதை வரைவதன் நோக்கம் **"தன்பால் காண்பது கருதிப் போந்தனன் மாண்பொருள் கொடுத்துவர விடுப்பதுவே"** எனவும் நிறைவுறுகின்றது.

திருவாலவாயார் பாணபத்திரனாரின் கனவிற் தோன்றி இத் திருமுகத்தை விரைந்து மலைநாட்டிற்கு எடுத்துச் சென்று பெரும் பொருள் பெறுவாயாக என ஆற்றுப்படுத்துகின்றார். திருவாலவுடையாரும் பாணபத்திரனாரும் மதுரையில் அதாவது பாண்டிய நாட்டிலே தான் இருக்கின்ற காரணத்தால் பாண்டிய மன்னன் மூலம் ஏழ்மையைப் போக்கியிருக்கலாம். அதைவிடுத்து நெடுந் தூரத்திலுள்ள மலைநாட்டிற்குத் திருமுகம் வரையப்படுகிறது. இது முதல்வனுக்கும் அரசனுக்கும் இடையேயுள்ள உறவின் பிரதிபலிப்பாகும்.

மகோதை - அஞ்சைக்களத்தை இராசதானியாகக் கொண்டமைந்த மலை நாட்டை ஆட்சிசெய்த சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்தி நாயனாரின் உற்ற நண்பர். சுந்தரர் கைலாயத்திற்கு வெள்ளானை மீது செல்வதை உணர்ந்த அரசன் திருவஞ்சைக்களத்தப்பரை

வணங்கி விடைபெற்றுத் தனது குதிரையின் மீதமர்ந்தவாறே விண்வெளியாக உலாப்பிரபந்தத்தை இசைத்தவண்ணம் திருக்கைலாயம் சேர்ந்து கைலாயநாதர் திருமுன் அதனை அரங்கேற்றினார். இந்த உலா தமிழில் எழுந்த முதல் உலா; ஞான உலா; ஆதி உலா, திருவுலா எனப் போற்றப்படும் சிறப்புடையது. இரட்டைப் புலவரின் ஏகாம்பரநாதர் உலாவில் இதன் சிறப்பு **"பொன்வண்ணத்தந்தாதி ஆதியுலா வோடமைத்தானும்"** எனப் போற்றப்படுகின்றது. திருமுறைகளில் இவ்வுலாப் பிரபந்தம் மட்டுமே கைலாயநாதர் திருமுன் பாடியருளப்பட்ட பெருமைக்குரியதாகும்.

இவ்வண்ணம் பல சிறப்புக்களையுங் கொண்டு திகழும் மகோதை - அஞ்சைக்களச் சிவத்தலத்தை திருவாவடுதுறை ஆதீன கொழும்பு பயிற்சி மையத்தின் இயக்குனர் மற்றும் பேராசான்களின் வழிகாட்டலுடன் தரிசித்து திருவருள் பெறச் சந்தர்ப்பம் கிடைத்தமை (சிவத்தல யாத்திரை 2016 தை) எமது தவப்பயனேயாகும்.

திருமுறைநெறிச்செல்வர் சு. குமாரசாமி

7ஆம் பக்க தொடர்ச்சி

சக்கரத்தை அருளினார் என்றும் வரலாறு உண்டு. கோவிலின் விமானத்தில் ஆயுதம் இன்றித் திருமால் தோன்றுகிறார்.

இவர் வீழிச்செடிகள் நிறைந்த இத் திருத்தலத்தில் எழுந்தருளியமையால் வீழிநாதர் எனப் பெயர் பெற்றார். கோவிலுக்கு வெளியே சம்பந்தருக்கும், அப்பருக்கும் தனிச் சந்நிதிகள் உள்ளன. அருணகிரிநாதர் இத்தல முருகன்பால் திருப்புகழ் பாடியுள்ளார். இங்குள்ள வெளவால் நெற்றி மண்டபத்தின் நடுவே தூண்கள் கிடையாது. இங்கே பாதாள நந்தி இருக்கிறார். முதலில் கோவில் எழுப்பப்பெற்று பின் மாடக் கோவிலாக உருவானதால் பாதாள நந்தி அங்கே இருந்துவிட்டார் என்பர். அம்பிகையின் பெயரை வடமொழியில் சுந்தர குஜாம்பிகை என்கின்றனர். தமிழில் அழகுமாமுலையாள் என்றே வழங்கி வருவதைக் காணலாம்.

சித்திரை மாதத்து மகத்திருவிழா மிகவும் சிறப்பானது. ஆறாம் நாள் தேரோட்டத்தில் அம்மையும் அப்பனும் ஒரே தேரில் பவனிவரும் தேர்த்திருவிழா நடைபெறும். இத்தல தீர்த்தம் விஷ்ணு தீர்த்தமாகும்.

திருமுறைநெறிச்செல்வர் புஷ்பராணி சதானந்தன்

# காணாதே போதியோ?

இடபாரூடராக இறைவனும் இறைவியும் எழுந்தருளி திருமுலைப்பாலுடன் சிவஞானத்தை குழைத்தூட்ட உண்ட குழந்தை ஞானசம்பந்தர். மூன்று வயதில் சிவஞானம் பெற்று "தோடுடைய செவியன்" என்ற தேவாரப்பதிகம் பாடியருளினார்.

திருமயிலாப்பூரில் சிவநேசச்செட்டியார் மகள் பூம்பாவை அரவு தீண்டி இறந்தபின் அவளுடைய சாம்பலையும் என்பையும் ஒரு குடத்திலிட்டு பாதுகாத்து வந்தார். ஞானசம்பந்தர் மயிலாப்பூருக்கு எழுந்தருளியிருப்பதை அறிந்து அவரிடம் தன் குறையை முறையிட்டபொழுது மயிலாப்பூர் கோயில் புறத்தே அக்குடத்தை இடச்செய்து கபாலீஸ்வரரையும் கற்பகாம்பிகையையும் துதித்து பாடியருளிய பதிகமே "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை" என்பதாகும். சீகாமர பண்ணில் அமைந்த பாடல். 2ஆம் திருமுறையில் உள்ளது.

மாதந்தோறும் பௌர்ணமியோடு கூடிய நட்சத்திரங்களில் வரும் விஷேட விழாக்களை குறிப்பிட்டு "காணாதே போதியோ பூம்பாவாய்" எனப்பாடி மனமுருகி கபாலீஸ்வரரை துதிக்கின்றார். எதற்காக இவ்விழாக்களை குறிப்பிட்டு ஞானசம்பந்தர் பாடினார் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால் விழாவோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் யாவும் இறைவனது அருளைப் போற்றுகின்றதாக இருப்பதால் அவ்விழாக்களின் சிறப்பைக்கூறி இறையருளால் இவளும் உயிர் பெற்று எழவேண்டும் என்ற விண்ணப்பத்தோடு விழாக்களின் சிறப்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாடலில் சிறப்பித்து பாடியருளியமை போற்றுதற்குரியது.

தைமாத பௌர்ணமியும் பூச நட்சத்திரமும் இணைந்து வருவது தைப்பூச நன்னாள். இறைவனால் உலகம் படைக்கப்பட்டநாள். அதாவது பிரபஞ்ச சிருஷ்டி உண்டான நாள். இங்கு பூம்பாவை எலும்பாக கிடக்கின்றாள். அவள் பூமியில் சிருஷ்டியடைய வேண்டும் என்ற நோக்கில் தைப்பூச விஷேடம் கருதி "தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்" எனப்பாடி இறைவனை துதிக்கின்றார்.

பிறவியாகிய பெருங்கடலில் வீழ்ந்து துன்பப்படும் மக்களை ஈடேற்றி அருட்கடலில் திளைக்கச் செய்யும் நாள் மாசிமக நாளாகும். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வருவது மகாமகம். மாசிமக தினத்தைக் "கடலாட்டு விழா" என அழைப்பர். மாசிக் கடலாட்டுக் கண்ட இறைவன் கபாலீஸ்வரத்தில் அமர்ந்துள்ளான். அவன் அடி பரவி பிறவிப் பெரும் பயனைப் பூம்பாவை அடைய வேண்டும் என்று "மாசிக்கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான் - அடல் ஆனேறூரும் அடிகளடி பரவி - நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்" என பூம்பாவைக்கு கூறுமாப்போல் இறைவனுக்குக் கூறி இறைஞ்சுகின்றார்.

பங்குனி மாதம் பௌர்ணமியோடு சேர்ந்து வரும் உத்தர நட்சத்திரம் சேர்ந்த நாள் பங்குனி உத்தர நாளாகும். சக்தியோடு இறைவன் பொருந்தி இருந்தால்தான் உலக இயக்கம் நடைபெறும். இங்கு சிவன் சக்தியை பிரிந்திருந்த வேளை உலகஇயக்கம் தடைப்பட்டது. மன்மதன் மலரம்பு தொடுத்து இறைவன் நெற்றிக்கண் நெருப்பினால் சாம்பலானான். ரதியின் வேண்டுகோளையடுத்து மன்மதன் உயிர் பெற்றான். ரதிக்காக இரங்கி மன்மதனை எழுப்பிய உன் கருணையைப் போன்று இங்கும் பூம்பாவையை

எழுப்பித் தரும்படி வேண்டி "பலிவிழாப் பாடல் செய் பங்குனி உத்தரநாள் ஒலிவிழா காணாதே போதியோ பூம்பாவாய்" என இரக்கத்தோடு வேண்டுகின்றார்.

ஐப்பசி ஓணத்தன்று சிறப்பு விழா எடுப்பது வழக்கம். கபாலீசுவரரை இராமபிரான் வழிபட்டு ஐப்பசி ஓணநாளிலே பிரமோற்சவம் நடத்தினான். சிவாலயங்களிலே ஐப்பசி ஓணவிழா சிறப்புற நடந்துள்ளமை பற்றி முதலாம் இராஜராஜசோழன் திருவீழிமிழலையில் ஐப்பசி ஓணவிழாவிற்கு வரும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கக் காசு அளிக்கப்பட்ட செய்தி அக்கோயிற் கல்வெட்டிலுண்டு. "ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவுங் காணாதே போதியோ" என கற்பகாம்பிகை பாகனைத் துதிக்கின்றார்.

பஞ்சபூத வழிபாட்டில் இறைவனை ஜோதிரூபமாக வழிபட்டநாள் திருக்கார்த்திகையாகும். கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரம் கூடிவரும்நாள். கார்த்திகை நட்சத்திரத்திற்கு அதி தேவதை அக்கினி. கார்த்திகை நட்சத்திரத்தை பரிபாடலில் "எரி" என்றும், புறநானூற்றில் "அழல்" என்றும் பாடியதிலிருந்து இதன் தொன்மை விளங்குகிறது. இதனாலன்றோ ஞானசம்பந்தரும் "தொல் கார்த்திகை நாள்" எனக் குறிப்பிடுகின்றார்.

நானே பெரியவன் என்று அகந்தை கொண்ட திருமாலுக்கும் பிரமனுக்கும் நடுவே ஜோதியாகத் தோன்றிய உன் பெருமையறிந்து அவர்கள் உன்னை வணங்கிய பொழுது இருவருக்கும் அருள் புரிந்தாய். அதே போன்று "தளந் தேந்திள முலையார் தையலார் கொண்டாடும் விளக்கீடு காணாதே போதியோ" என குறிப்பிட்டதிலிருந்து பூம்பாவையும் இளமங்கையாக உயர்வு பெற்று எழ வேண்டும் என்று ஞான சம்பந்தர் இறையருளை வேண்டி நிற்கின்றார்.

ஆதியும் அந்தமுமில்லா இறைவனது நட்சத்திரம் திருவாதிரை. இருபத்தேழு நட்சத்திரங்களுள் "திரு" என்ற அடையாளம் கொண்ட நட்சத்திரங்கள் இரண்டு. ஒன்று திருவாதிரை மற்றது திருவோணம். உலக இயக்கத்திற்காக ஆனந்தத் தாண்டவமாடும் நடராஜமூர்த்திக்கு ஒரு வருடத்தில் ஆறு அபிஷேகங்கள் நடைபெறுவது வழக்கம். அதில் உதயத்திற்கு முன் அபிஷேகம் நிகழ்ந்து உதயத்தில் தரிசனம் தரும் சிறந்த நாள் ஆருத்ரா தரிசனமாகும். சூரியன் தனுர் இராசியில் சஞ்சரிக்கும் காலமாகிய மார்கழி மாதம் வருவது திருவாதிரை. ஆன்மா ஆணவ மலத்தினால் கட்டுண்டு கிடக்கும் பொழுது கருணாமூர்த்தியாக இறைவன் எழுந்தருளி உயிர்களின் துன்பம் நீக்கி ஆட்கொள்வதுபோல இப் பெண்ணின் துன்பத்தையும் நீக்கி அவள் உயிர்பெற்றெழ அருள்புரிய வேண்டுமென்று "ஆதிரை நாள் காணாதே போதியோ" என கபாலீஸ்வரம் அமர்ந்தவனை வேண்டுகின்றார்.

கந்தபுராணத்திலுள்ள ஏழாவது காண்டமாகிய உபதேசகாண்டம் "சிவவிரதங்கள் எட்டு" எனக் கூறுகின்றது. வைகாசி மாதம் வரும் அட்டமிநாளும் அவற்றுள் ஒன்று. "பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள் - கண்ணாரக் காணாதே போதியோ" என்று பூம்பாவையை எழுப்புமுகமாக இறைவன்தம் பெருமையைக் கூறி அவரிடம் விண்ணப்பம் செய்கின்றார்.

இளவேனிற் காலத்தில் வசந்த உற்சவம் நடைபெறும். கபாலீச்சரம் அமர்ந்தவனுடைய "பொற்றாப்பு காணாதே போதியோ" என்று பொன்னூஞ்சல் விழா சிறப்பினை எடுத்தியம்பி இறைவன் புகழ் பாடுகின்றார்.

அடுதல் என்றால் சமைத்தல். அட்டிட்டல் - உணவு சமைத்து அடியவர்களுக்கு அன்னதானம் செய்தல். "உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ" என்று அன்னதானச் சிறப்பு கூறுகின்றார்.

நித்திய பூசைக் குறைபாடு நைமித்திய பூசையால் நிவர்த்தியாகும். நைமித்திய பூசைக் குறைபாடு பவித்திர உற்சவத்தால் நிவர்த்தியாகும். பவித்ர உற்சவத்தை பெருஞ்சாந்தி எனவும் அழைப்பர். இதுவரை கூறிய விரதமகிமையைத் தவிர்த்தாலும் பெருஞ்சாந்தியைக் கண்டால் சகல பாவங்களும் நீங்கி நற்பலன் கைகூடும். எனவே "பெருஞ்சாந்தி காணாதே போதியோ" என மனம் நொந்து பாட பன்னிரண்டு வயது இளமங்கையாகப் பூம்பாவை தோற்றம் பெறுகின்றாள்.

இதனை சேக்கிழார் அவர்களும் தனது திருத்தொண்டர் புராணத்தில்

"எடுத்த பாட்டினில் வடிவு பெற்று இருநான்கு திருப்பாட்டு
அடுத்த அம்முறை பன்னிரண்டு ஆண்டு அளவு அணைந்து
தொடுத்த வெம்சமண் பாட்டினில் தோன்றிடக் கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக்காப்பு மேல் விரித்தார்"

என போற்றுகின்றார்.

பண்டிதை மரகதா சிவலிங்கம்

## சைவப்புலவர் பரீட்சைப் பெறுபேறுகள்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கடந்த ஏப்ரல் மாதம் நடாத்திய சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்றோர் விபரம் வெளியாகியுள்ளது. அந்த வகையில் சைவப்புலவர் பரீட்சைகளில் செல்வநாயகம் சாந்தரூபன் (செங்கலடி), கனகதுர்க்கா கனகரத்தினம் (ஏழாலை), தர்மராஜா உதயசங்கர் (திருகோணமலை), விமலகாந்தன் புஷ்பலட்சுமி (வெள்ளவத்தை), சதாசிவன் உருத்திரேஸ்வரன் (அரியாலை), சத்தியவதனி மாணிக்கநடராஜா (வெள்ளவத்தை) ஆகியோரும், இளஞ்சைவப்புலவர் பரீட்சையில் ஜெயகுமார் ஜெயரூபி (யோகபுரம்), நாராயணமூர்த்தி சுஜீபன் (தவசிக்குளம்), திருமதி சற்சொரூபவதி முரளிதரன் (கொட்டாஞ்சேனை), நடராசா ரணிதா (பொலன்னறுவை), கனகசூரிய சிவகாயத்திரியநாயகி (சுன்னாகம்), வேலுப்பிள்ளை சிவசுந்தரம் (மானிப்பாய்), நித்தியானந்தன் தர்சிகா (பூநகரி), பழனி சுசிலா (பொலன்னறுவை), மகேந்திரன் விமலகாந்தன் (பொலன்னறுவை), கஸ்தூரி செல்வராசா (மாவிட்டபுரம்), குணராசா டிலம்சன் (கண்ணகிபுரம்), முருகுப்பிள்ளை டயனரூபி (வாழைச்சேனை), கந்தசாமி யுகாந்தி (பொலன்னறுவை), செல்லத்தம்பி தேவதாஸ் (மட்டக்களப்பு), இராமையா ஜீவன்பிரசாந் (வெல்லம்பிட்டிய), சரோஜினிதேவி மார்க்கண்டு (பம்பலப்பிட்டி), செல்வராஜ் உதயகௌரி (வத்தளை), மல்லிகா சிவராசா (வெள்ளவத்தை), குபேரன் கஜல்விழி (பூநகரி), யோகேந்திரன் உதயதர்சினி (வாழைச்சேனை), ஹரிந்துஜா முடிராஜா (காரைநகர்), இராசதுரை பிரிற்ஜினி (மட்டக்களப்பு), அழகேஸ்வரி தியாகராஜா (வெள்ளவத்தை) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

நன்றி வீரகேசரி

# மனம் போல் வாழ்வு

**மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்**
**இனநலத்தின் ஏமாப் புடைத்து.**

- திருக்குறள் 459

**மனத்தின் நலத்தால் மறுமையின்பம் எய்தும். அதுவும் இனத்தின் நலத்தால் இன்னும் சிறக்கும்.**

இந்த அரிய கருத்தை விளக்கும் கதை அடியில் வருமாறு.

ஒருவருடைய வாழ்வு அவருடைய மனத்தின் நினைவு நலத்திற்குத் தக்கவாறுதான் அமையும்

மனம் ஒரு கத்தி போன்றது. கத்தி மாம்பழம் நறுக்கவும் உதவும்; பிறருடைய தலையை அறுக்கவும் உதவும். அது போல் மனம் நன்மை நினைக்கவும் ஆகும்; தீமை நினைக்கவும் ஆகும். நலந் தீங்கு இரண்டுக்கும் நமது மனமே பரம காரணம் என்று உணர்க.

மனத்தில் நெடுங் காலமாக மாசு ஏறியுள்ளது. அந்த மாசினை நாம் அகற்றவேண்டும் என்று முயல்வதில்லை. "ஏன் மனத்தில் மாசு படிந்துளது? " என்ற எண்ணமேயில்லை.

பாத்திரங்களை அன்றாடம் விளக்குகின்றோம்; பல் விளக்குகின்றோம். அன்றாடம் ஆடைகளைத் தோய்க்கின்றோம். கண்ணாடி முதலியவற்றைத் தினம் துடைக்கின்றோம். நமது மனதை மட்டுந் துடைப்பதில்லை. பெரிய அறம் எது என்றால் மனத்தின் மாசினை அகற்றுதலாம். மற்ற எல்லாம் ஆரவார நீர்மையவாம்.

மனத்திலே தூய்மையில்லாதவர் புரியும் மாதவம் நன்கு பயன் தராது.

**"மனத்திலோர் தூய்மை யில்லை வாயிலோர் இன்சொல் இல்லை**
**சினத்தினால் செற்றம் நோக்கித் தீவினை விளிவன் வாளா**
**புனத்துழாய் மாலை யானே பொன்னிசூழ் திருவ ரங்கா**
**எனக்கினி கதியென் சொல்வாய் என்னையா ளுடைய கோவே"**

என்று தொண்டரடிப்பொடி யாழ்வார் பாடுகின்றார்.

தோய்க்காத துணியில் அழுக்கேறுவது போல், அறநூல்களைக் கல்லாத, அறநெறிகளைக் கேளாத நெஞ்சில் அழுக்கேறி விடுகின்றது.

மாசுடைய மனத்தினர் நினைத்த கருமங்கள் ஒன்றுங் கை கூடா. மாசிலா மனத்தினர் நினைத்த கருமங்கள் அனைத்தும் தெய்வத் திருவருளால் இனிது கைகூடும். கன்மனங் கரைந்து நன்மனம் பெற்றோர் மனத்தை இறைவன் கோயிலாகக் கொண்டு வீற்றிருப்பான்.

"நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்"

- அப்பர்

"மருவு மடியார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்"

- அருணகிரிநாதர்

மனத்திலே கோணலும் அமைந்து விடுகின்றது. கோணல் மனம் படைத்தவர்கள் பலர். கோடிய மனத்தால் தேடிய பாவங்கள் எண்ணிறந்தன. கோணல் மனம் படைத்தவர்கள் நல்லவர்களையும் அந்தக் கோணல் மனத்தாலே கண்டு அவர்கள் மீது பழிபாவங்களைச் சுமத்திப் பேசுவார்கள்.

தூயவர்களைத் தீயவர்களாகவே பார்ப்பார்கள். கோணல் மனம் உள்ளவர்கள் நேர்வழியில் நடக்க மாட்டார்கள். கோணல் வழியில்தான் நடப்பார்கள். அவர்கள் நினைவிலே கோணல்; பேச்சிலே கோணல்; செயலிலே கோணல்; இப்படி எல்லாமே கோணலாக அமைந்திருக்கும். இவ்வளவுக்கும் மூல காரணம் மனத்தின் கோணல் இருப்பதுவேயாகும். ஆகவே, அறிஞர்கள் கோணலுள்ள மனமான இரும்பை ஞானத் தீயினால் காய்ச்சித் தம் நீதி நூலாகிய சம்மட்டியினால் அடித்து நிமிர்த்த வேண்டும்.

நாம் நமது மனத்தால் பிறரை நன்கு மதித்து அன்பு செய்தால் அவர்களும் நம்மை மதித்து அன்பு செய்வார்கள். நாம் அவர்களை மதியாதிருப்பின், அவர்களும் நம்மை மதியாது புறக்கணிப்பர்.

அன்றியும் நாம் நம் மனைவியை உள்ளன்புடன் பேணிப் பிரியமாக நடத்தினால், மனைவியும் உள்ளன்புடன் கள்ளங்கபடு இன்றி நம்மைப் பேணி உபசரிப்பாள்.

நாம் மனைவியை சதா வெறுத்து ஒறுத்தால், அவளும் மறுத்து வருத்துவாள். "யத் பாவம் தத் பவதி" என்று வடமொழியில் கூறுவர். எப்படி நினைக்கின்றோமோ அப்படி விளையும்.

ஒரு நகரில் சந்தனக் கட்டை விற்கும் வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் பெருந் தனவந்தன். அந்நகரையாளும் மன்னவர் மாலை நேரத்தில் தமது மணித்தேரின் மீது ஏறிக் கடைவீதி வழியே சென்று, நகர வெளியில் போய் உலாவிவிட்டு மறுபடியும் தேரேறி அரண்மனை சேருவார். அங்ஙனம் செல்லும்போது, சந்தனக்கட்டை வியாபாரி கடையை விட்டிறங்கி நின்று மன்னவரைக் கரங்கூப்பித் தொழுவான். மன்னவரும் கை குவித்துக் கும்பிடுவார். இப்படி நாள்தோறும் நிகழும்.

ஒருநாள் மன்னர், வழக்கம் போல் சென்றார். சந்தனக் கட்டை வியாபாரி எழுந்து நின்று வணங்கினான். மன்னவருக்கு அன்று என்னமோ அவன் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டது. பதிலுக்கு கும்பிடவில்லை. காரணந் தெரியாத வெறுப்புணர்ச்சி.

மனதில் அவனைப்பற்றி அருவருப்பு. சந்தனக்கட்டை வியாபாரியாகிய செட்டியாரையே நினைத்துக் கொண்டு சென்றார்.

மன்னரிடம் மறுநாள் ஒரு மகான் வந்தார். அவர் திரிகால ஞானி. மனதில் இருப்பதனை யறியும் மகிமை வாய்ந்தவர். அவரை அரசர் பெருமான் அஞ்சலி செய்து, ஆசனத்தில் அமரச்செய்து, பாலுந் தேனுந் தந்து உபசரித்தார்.

“சுவாமி! ஒரு சிறு சந்தேகம். கடைவீதியில் ஒரு பிரபல சந்தனக் கட்டை வியாபாரி உள்ளார். அடியேன் அவ்வழியே போகும்பொழுது தினந்தோறும் அந்தச் செட்டியார் எழுந்து என்னைக் கைகூப்பித் தொழுவார். நானும் அவரை வணங்குவேன். நேற்று நான் போகும்போது அவர் என்னைத் தொழுதார். எனக்கு என்னமோ அவரிடம் காரணமில்லாமல் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. கை மறுத்து விட்டது. குருநாதா! இதன் காரணம் அறியாது மனம் தத்தளிக்கின்றது. எல்லாம் தெரிந்த தாங்கள்தாம் இதனை விளக்க வேண்டும்” என்றார்.

சாது மகான், “வேந்தே! இந்த வினாவுக்கு விடை மூன்று நாட்களுக்குப் பின்னர் கூறுவேன். இன்று நீர் போகும்போது உமது மனம் நினைக்கும் நிலைமையை நாளை என்னிடம் கூறும்” என்றார். மறுநாள் காலை மறுபடியும் சாது மகான் அரசனிடம் வந்தார். அரசன் தொழுதான். “அரசே! நேற்று கடைவீதியில் செட்டியாரைக் கண்டீரா? உன் மனநிலை எப்படியிருந்தது? ” என்று சாது கேட்டார்.

“சுவாமீ! அந்த ஆள்மீது நேற்றும் எனக்கு ஒரே வெறுப்புத்தான் ஏற்பட்டது. அவனைக் கொல்ல வேண்டும் போல் தோன்றியது” என்றான் மன்னன்.

“நல்லது” என்று கூறிவிட்டுச் சாது போய்விட்டார். மூன்றாவது நாள் வந்தார். “மன்னரே! இன்று மாலை உனக்கு அவனிடம் என்ன மாதிரி மனநிலை அமைகிறதென்று பார்த்துக் கூறு; நான் நாளை வருகின்றேன்” என்று கூறிவிட்டுச் சென்றார்.

அன்று மாலை அரசன் கடைவீதி வழியே போகும் பொழுது சந்தனக்கட்டை வியாபாரி எழுந்து வழக்கம் போல் கை கூப்பித் தொழுதான். அரசரும் அன்புடன் கை குவித்துக் கும்பிட்டார். அன்று அச்செட்டியார் மீது ஒன்றும் வெறுப்பு ஏற்படவில்லை; அவருக்கு ஆச்சரியம். மனநிலை இப்படி மாறியதற்கு என்ன காரணம்? என்று விளங்கவில்லை.

அடுத்தநாள் காலை அம்மகான் வந்தார். அரசனைக் கண்டு சிரித்தார். “இறைவனே! நேற்று உன் மனம் மாறியிருக்குமே? நீ கும்பிட்டிருக்க வேண்டுமே” என்று கேட்டார்.

“ஆம் சுவாமீ! இப்படி மனநிலை மாறிய காரணத்தைத் தேவரீர் கருணை செய்து கூறவேண்டும்” என்றான் அரசன்.

“'வேந்தே! அதற்குரிய காரணத்தை நான் கூறுகின்றேன் கேள். அந்தச்

சந்தனக்கட்டை வியாபாரியிடம் நிரம்பச் சந்தனக்கட்டைகள் இருந்தன. அவனுக்கு மூன்று நாட்களுக்கு முன் ஒரு புதிய நினைவு வந்தது.

“நம்மிடம் சந்தனக்கட்டை ஏராளமாக இருக்கின்றதே. மன்னருடைய அரண்மனையில் யாராவது இறந்துவிட்டால் நம்மிடமுள்ள சந்தனக்கட்டை முழுவதுந் தீர்ந்து விடுமே? (அரசர்கள் இறந்தால் அவர்களுடைய சரீரத்தைச் சந்தனக் கட்டையில் தகனம் புரிவது வழக்கம்.) ஆகவே, நமது மன்னரோ, மன்னருடைய தாயாரோ, மன்னருடைய மனைவியாரோ மாண்டால் நமக்கு நலம் விளையும்” என்ற எண்ணம் அவனுக்கு வந்தது. இந்த நினைவு கொண்டபடியால் அவனிடம் உனக்கு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது.

நான் நேற்றுக் காலை அவனிடம் உள்ள சந்தனக் கட்டை முழுவதையும் விலை கொடுத்து வாங்கி விட்டேன். உடனே, அவனுக்கு அந்தத் தீய எண்ணம் அகன்றது. அதனால், இன்று உனக்கு அவனிடம் ஏற்பட்ட அருவருப்பு அகன்றது” என்று சாது மகான் கூறினார்.

ஆதலால், நாம் நினைக்கின்ற தூய நினைவு, தீய நினைவு அலைகள் சென்று மீளவும் நம்பால் வந்து ஒடுங்குகின்றன.

ஒரு குளத்தின் நடுவில் ஒரு கல்லை எறிந்தால் நாலு பக்கங்களிலும் அலை புறப்பட்டு, ஓர் அலை மற்றோர் அலையை உண்டாக்கி, அந்த அலை வேறோர் அலையை உண்டாக்கி முடிவில் கரையில் பேரலையாக மோதி, மறுபடியும் அந்த அலை சிறிது சிறிதாகத் தேய்ந்து புறப்பட்ட இடத்திலே சென்று முடிவு பெறுகின்றது. அதுபோல், நாம் எல்லாரும் வாழவேண்டும் என்று தூய நினைவு நினைத்தால், அந்த நல்ல நினைவு அலை பிறரிடம் சென்று அவர்களிடமிருந்து மீண்டும் நம்மிடம் வந்து ஒடுங்குகின்றது.

அவன் கெட வேண்டும், இவன் கெட வேண்டும் என்று எண்ணுகின்ற தீய நினைவு அலைகள் சென்று மீளவும் நம்பால் வந்து நம்மைத் தாக்குகின்றன. ஆகவே, தூய நினைவால் நாம் வாழ்வோம்; தீய நினைவால் நாம் வீழ்வோம். இந்த இரகசியம் பலருக்குத் தெரிவதில்லை. ஆகவே, மனம் போல் வாழ்வு அமைகின்றது.

நல்ல மனம் படைத்தவருக்கு நல்வாழ்வும், தீய மனம் படைத்தவருக்கு அல்வாழ்வும் உண்டாகும்.

மக்கள் யாவரும் இதனை நன்கு உணர்ந்து, உலகமெல்லாம் வாழட்டும். ஊரெல்லாம் வாழட்டும், உயிர்களெல்லாம் வாழட்டும், சராசரமெல்லாம் வாழட்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

“நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.”

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

# யாப்பிலக்கணம்
# வினாவும் விடையும்
## உறுப்பியல் (எழுத்து - அசை)

**1. யாப்பிலக்கணம் பயில்வதற்குரிய நூல்களில் ஒன்றாய் விளங்கும் யாப்பருங்கலக் காரிகை என்னும் நூலைப்பற்றிச் சிறுகுறிப்பெழுதுக?**

முதற் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த அமுதசாகரர் என்பவரே யாப்பருங்கலக் காரிகை என்னும் நூலை இயற்றினார். குணசாகரர் என்பவர் இதற்கு விரிவான உரையை எழுதினார். ஈழநாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாணச் சுன்னாகத்துக் குமாரசுவாமிப் புலவர், யாப்பருங்கலக் காரிகைக்கு குணசாகரர் உரைத்த உரையிலுள்ள குறைபாடுகளை நோக்கிப் புத்துரை ஒன்றினை இயற்றினார். இந்நூல் மனனம் பண்ணும் வகையிற் சுருக்கமாக அமைந்திருக்கும் காரணத்தினாலேதான் இன்றும் புலவருலகில் விளக்கத்துடன் பெரிதும் பயன்பட்டு வருகிறது.

தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினர்க்கினியர் என்னும் ஆசிரியர்களுடைய உரையுடன் இருந்தும் அதனை ஆராய்கின்றவர் மிகமிகச் சிலரேயாம். "காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே" என்ற பழமொழியைப் பலரும் அறிந்திருப்பார்கள். இதனைக் கொண்டு அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் நன்கு ஆழ்ந்து கற்றுப் பாடினார்கள் என அறிய முடிகிறது. எனவே யாப்பருங்கலக் காரிகை நூலை ஆழ்ந்து கற்றல் அவசியமாகும்.

**2. யாப்பிலக்கணம் என்றால் என்ன?**

செய்யுள் இலக்கணத்தையே யாப்பிலக்கணம் என்று வழங்குவது மரபாகும். (யாப்பு - கட்டப்பட்டது. Composition)

**3. செய்யுளின் இலக்கணம் எத்தனை வகை? அவை யாது?**

1) உறுப்பியல் (உறுப்பு - அவயவம், அங்கம் limb, part)
2) செய்யுளியல் என இருவகைப்படும்

**4. உறுப்பியல் எதனைப் பற்றிக் கூறுகிறது?**

உறுப்பியல் செய்யுளின் இலக்கணம் பற்றிக் கூறுகிறது.

**5. செய்யுளியல் எதனைப்பற்றிக் கூறுகிறது?**

செய்யுளியல் பாவும் பாவினமும் ஆகிய செய்யுட்களின் இலக்கணம் பற்றிக் கூறுகிறது.

**6. செய்யுள் உறுப்பு எத்தனை வகைப்படும்?**

செய்யுள் உறுப்புகள் முறையே

1) எழுத்து 2) அசை 3) சீர்
4) தளை 5) அடி 6) தொடை என 6 வகைப்படும்.

## எழுத்து

**7. தமிழ் எழுத்துக்களின் வகையையும் தொகையையும் கூறுக?**

தமிழ் நெடுங்கணக்கில்

| | | | |
|---|---|---|---|
| 1) உயிரெழுத்துக்கள் | அ - ஔ வரையும் | 12 | |
| 2) மெய்யெழுத்துக்கள் | க் - ன் வரையும் | 18 | |
| 3) உயிர்மெய்யெழுத்துக்கள் | க - னௌ வரையும் | 216 | |
| 4) ஆய்த எழுத்து | ∴ | 1 | |
| | | 247 | ஆகும். |

**8. குறில், நெடில், மெய்யெழுத்து வேறு எவ்வாறு அழைக்கப்படும்?**

குறில் - குற்றெழுத்து
நெடில் - நெட்டெழுத்து
மெய்யெழுத்து - ஒற்றெழுத்து எனக் கூறப்படும்.

**9. 247 எழுத்துக்களும் யாப்பிலக்கணத்தில் எவ்விதம் பங்கு பற்றுகின்றன?**

குறில், நெடில், ஒற்று என்னும் பெயரைத் தாங்கிப் பங்கெடுக்கும்.
குறில் அ, இ போன்ற எழுத்துக்களுக்கு உதாரணமாகும்.
நெடில் ஆ, ஈ போன்ற எழுத்துக்களுக்கு உதாரணமாகும்.
ஒற்று க், ட் போன்றவை
ஆய்த எழுத்தான ∴ உம் ஒற்றெழுத்துடன் கணிக்கப்படும்.

## அசை

**10. அசை எத்தனை வகைப்படும்?**

அசையானது நேரசை நிரையசை என இருவகைப்படும்.

**11. அசையின் வரைவிலக்கணம் யாது?**

எழுத்துக்கள் அதாவது

1) ஒரு குறிலோ உதாரணம் க
2) அல்லது ஒரு நெடிலோ உதாரணம் போ
3) அல்லது இரண்டு குறிலோ உதாரணம் கதி
4) அல்லது ஒரு குறிலுடன் ஒரு நெடில் உதாரணம் சுறா
5) இவற்றுடன் ஒற்றடுத்தும் (மெய்யெழுத்துப் பொருந்தியும்)
   ஒற்றடுக்காமலும் (மெய்யெழுத்துப் பொருந்தாமலும்)
6) சேர்ந்து அசைத்து இசைப்பது அசையெனக் கொள்க. இவ்வசை, சீருக்கு உறுப்பாக விளங்கும்.

( சீர் பற்றி அடுத்து இனி வரவிருக்கும் வினாக்களில் விளங்கிக் கொள்ளவும்.)

**12. நேரசையை விளக்கிக் கூறுக?**

1) ஒரு குறிலோ (தனிக்குறில்) அல்லது
2) ஒரு நெடிலோ (தனி நெடில்)
3) ஒற்றடுத்தும்
4) ஒற்றடுக்காமலும் வருவது நேரசையாகும்.

**13 இதற்குரிய வாய்பாடு, எழுத்து, அசை என்பவற்றைக் கொண்டு ஓர் அட்டவணை அமைக்கவும்.**

நேரசைக்குரிய அட்டவணை

| வாய்பாடு | எழுத்து | அசை |
|---|---|---|
| 1) ஆ → | தனி நெடில் → | நேர் |
| 2) ழி → | தனிக் குறில் → | நேர் |
| 3) வெள் → | குறிலுடன் ஒற்று அடுத்து வந்தது → | நேர் |
| 4) வேல் → | நெடிலுடன் ஒற்று அடுத்து வந்தது → | நேர் |

**14. நிரையசையை விளக்கிக் கூறி அதற்குரிய வாய்பாடு, எழுத்து, அசை என்பனவற்றை ஓர் அட்டவணை மூலம் அறியத் தருக?**

1) இரு குறிலுடனோ (இணைக்குறில்) அல்லது
2) ஒரு குறிலுடன் ஒரு நெடிலும் (குறில்நெடில்) அல்லது
3) இரு குறிலுடன் ஒற்று அடுத்தும்
4) ஒற்று அடுக்காமலும் வருவது நிரையசை ஆகும்.

நிரையசைக்குரிய அட்டவணை

| வாய்பாடு | எழுத்து | அசை |
|---|---|---|
| 1) வெளி → | குறிலிணை(இணைக்குறில்) → | நிரையசை |
| 2) சுறா → | குறில் நெடில் → | நிரையசை |
| 3) நிறம் → | குறில்இணை ஒற்று → | நிரையசை |
| 4) விளாம் → | குறில் நெடில் ஒற்று → | நிரையசை |

**15. நேரசை, நிரையசைக்குரிய வாய்பாட்டை விளக்கும் பழஞ்சூத்திரமொன்றைக் கூறுக? அதன் பொருளையும் தருக?**

இருவகை அசைக்குரிய பழஞ்சூத்திரம்
"குறிலே நெடிலே குறிலிணைக் குறிநெடிலே
நெறியே வரினு நிரைந்தொற்றடுப்பினு நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளியு தாரண மாழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே"

பொருள்:- குற்றெழுத்து அல்லது நெட்டெழுத்துத் தனியே வரினும், ஒற்றெழுத்துடன் சேர்ந்து வரினும் நேரசையாம். குறில் இணைந்து வரினும் குறில் நெடில் இணைந்து வரினும் குறில் இணைந்து ஒற்றடுத்து வரினும் குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசையாம்.

நெறியே வரினும் - முறையாக வந்தாலும், நிரைந்து - வரிசையாக நின்று, வேய்புரையும் மென்தோளி - மூங்கிலை ஒத்த மெல்லிய தோளை உடையபெண்ணே - ஒரு

பெண்ணை நோக்கிப் பாடஞ்சொல்லிக் கொடுப்பதுபோல ஆசிரியர் பாட்டைப் பாடியிருக்கிறார். பெண்ணை முன்நிலையாக வைத்துப் பாடினால் அதை மகடூஉ முன்நிலை என்பர். வேண்டுவர் - புலவர்கள் விரும்புவார்கள். மகடூஉ - பெண்.

**16. நேரசையால் மட்டும் அமையும் ஆசிரியப்பா ஒன்றினை எழுதி அசை பிரித்துக் காட்டவும்?**

“போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே”

இவ்வாசிரியப்பாவில் உள்ள எல்லா அசைகளும் நேரசையாக வந்துள்ளதைக் காணலாம். இவ்வாசிரியப்பாவின் ஈற்றுக்கு முதலடி மூன்று சீர்கள் பெற்று வந்தமையால் இது நேரிசை ஆசிரியப்பா என்று கூறப்படும்.

(சீர் பற்றி அடுத்து இனிவரும் வினா விடைகள் மூலம் அறிந்து கொள்ளலாம்)

இப்பாடலைப் பின்வருமாறு அசை பிரிக்கலாம்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போ | து | x | சாந் | தம் | x | பொற் | ப | x | வேந் | தி |
| நேர் | நேர் | x | நேர் | நேர் | x | நேர் | நேர் | x | நேர் | நேர் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | தி | x | நா | தற் | x | சேர் | வோர் |
| நேர் | நேர் | x | நேர் | நேர் | x | நேர் | நேர் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சோ | தி | x | வா | னந் | x | துன் | னு | x | வா | ரே |
| நேர் | நேர் | x | நேர் | நேர் | x | நேர் | நேர் | x | நேர் | நேர் |

குறிப்பு :- அசை பிரிக்கும் போது ஒற்றெழுத்து வருமாயின் அவ்வொற்றெழுத்தை இடது புறமாகத் தள்ளி அசையைப் பிரித்துக் கொள்ளவும்.
உதாரணம் :- சேர்வோர்
சேர் | வோர் என்று ஒற்றெழுத்தை இடப்புறமாகத் தள்ளி அசையைப் பிரிக்கவும்.
சே | ர்வோர் எனப் பிரித்தல் பிழையாகும்.

**17. குறில் எங்கெங்கு எவ்வகையாக வரும்?**

அசை பிரிக்கும் பொழுது குறில் தனியாக வருமாயின் அது நேரசை எனப்படும். உதாரணம் க. ஒரு குறில் இன்னொரு குறிலுடன் (இணைக்குறில்) அல்லது இணைக்குறிலானது ஒற்றெழுத்துடன் சேர்ந்து வருமாயின் அது நிரையசை எனப்படும். உதாரணம் தவ, தவம்.
ஒரு குறில் இன்னொரு நெடிலுடன் அல்லது ஒரு குறில் இன்னொரு நெடிலுடன் சேர்ந்து ஒற்றெழுத்தும் அதனுடன் ஒற்றடுக்காமலும் வருமாயின் அது நிரையசை எனப்படும். உதாரணம் சுறா, விளாம். வெண்பாவின் இறுதி ஓரசைச் சீரில் குறிலானது தனியே வந்து முடியுமாயின் அல்லது அதனுடன் ஒற்றெழுத்து அடுத்து வந்து முடியுமானால் அதை நாள் என்னும் வாய்பாடு என்று கூறுவர். உதாரணம் நொ, கல். மேலும் வெண்பாவின் இறுதியில் ஓரசைச் சீராக இணைக் குறில் வருமாயின் அல்லது அதனுடன் ஒற்றும் அடுத்து வருமாயின் அது மலர் வாய்பாடு என்று கூறப்படும். உதாரணம் சுறா, விளாம்.

**18. நிரையசையால் விளக்கந் தரக்கூடிய ஆசிரியப்பா ஒன்றினை எழுதி அசையையும் பிரித்துக்காட்டுக?**

"அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழுவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே"

இவ்வாசிரியப்பாவின் கடைசியாக வரும் ஈற்றசை ("ரே") ஒழிந்த ஏனைய அசைகளெல்லாம் நிரையசையாக வந்துள்ளன. இனிப் பாட்டினை அசை பிரித்துக் கூறுவோம்.

அணி - குறிலிணையாலாய நிரையசை.
நிழல் - குறிலிணை ஒற்றடுத்தாய் வந்த நிரையசை.
அசோ - குறில் நெடிலால் வந்த நிரையசை.
நடாத் - குறினெடில் ஒற்றடுத்ததால் வந்த நிரையசை.
இதுபோல ஏனையவற்றையும் எழுதிக்கொள்க.

அசை பிரித்தல்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அணி | \| | நிழ | x லசோ | \| | கமர்ந் | x தரு | \| | நெறி | x நடாத் | \| திய |
| நிரை | \| | நிரை | x நிரை | \| | நிரை | x நிரை | \| | நிரை | x நிரை | \| நிரை |
| மணி | | திக | x ழுவி | \| | ரொளி | x வர | \| | தனைப் | | |
| நிரை | \| | நிரை | x நிரை | \| | நிரை | x நிரை | \| | நிரை | | |
| பணி | | பவர் | x பவ | \| | நனி | x பரி | \| | சறுப் | x பவ | \| ரே |
| நிரை | \| | நிரை | x நிரை | \| | நிரை | x நிரை | \| | நிரை | x நிரை | \| நேர் |

**19. சிறப்பசை சிறப்பிலசை என்பதை விளக்குக?**

அசைகள் சேர்ந்து சீராகி அல்லது ஓரசைச் சீராய் வரினும் தனித்துநின்று பொருள் பயக்கும் ஆற்றல் உடைய அசையைச் சிறப்புடை அசையென்றும், பொருள் தரும் ஆற்றல் இல்லாத அசை சிறப்பிலசை (சிறப்பில்லாத) என்றும் கூறுவர்.

முன்னர் எழுதிய"அணிநிழ லசோ கமர்ந்...." என்ற பாடலில் அணிநிழல் என்னும் சீரிலே வந்த அசைகள் இரண்டும் சிறப்புடை அசைகள். அவை அணிஎன்றும் நிழல் என்றும் பொருள் தருகின்றன. நடாத்திய என மேலே உள்ள பாடலின் முதலடியின் இறுதிச்சீர் நடாத்|திய என இரு அசையாகப் பிரிந்தும் பிரிந்தவழி பொருள் தராது. இது சிறப்பிலசை (சிறப்பில்லாத) ஆகும்.

தொடரும்...

சித்தாந்தரத்தினம் செல்வி. வ. தேவராணி

# சைவசமயம்
# மாணவர் அறிவுப் பெட்டகம்
## (வினா விடை)

1. **சைவம் எதனோடு சம்பந்தமுடையது?**
   சிவத்தோடு
2. சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார்?
   சிவபெருமான்
3. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?
   நித்தியர் (என்றும் உள்ளவர்)
   சர்வவியாபகர் (எங்கும் நிறைந்தவர்)
   அநாதிமலமுத்தர் (இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவர்)
   சர்வக்ஞர் (எல்லாம் அறிந்தவர்)
   சர்வகர்த்தா (எல்லாம் செய்பவர்)
   நித்தியானந்தர் (என்றும் மகிழ்ச்சியுடன் இருப்பவர்)
   சுவதந்திரர் (தம்வயமுடையவர்)
4. சிவபெருமான் செய்யும் ஐந்தொழில்களும் எவை?
   1) படைத்தல் - ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களை முதற் காரணமாகிய மாயையினின்றும் தோற்றுவித்தல்.
   2) காத்தல் -தோற்றுவிக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை நிறுத்துதல்.
   3) அழித்தல் - தனு கரண புவன போகங்களை முதற்காரணத்தில் ஒடுக்குதல்.
   4) மறைத்தல் - ஆன்மாக்களை நல்வினை, தீவினை என்ற இருவினைப் பயன்களாகிய போக்கியப் பொருள்களில் (புண்ணியபாவம்) அமிழ்த்துதல்.
   5) அருளல் - ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதல்.
5. மாயாகாரியங்கள் எவை?
   தனு, கரண, புவன, போகங்கள்.

தனு, கரண, புவன, போகங்கள் என்பவை யாவை?

தனு - உடம்பு, கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலிய அந்தக் கரணங்களும், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள் முதலிய புறக்கருவிகளும் , புவனம் - உடம்புக்கு ஆதாரமாகிய உலகம், போகம் - நுகர்வுப் பொருள்கள்.

6. தனு கரண புவன போகம் என்படும் பிரபஞ்சமாகிய காரியத்திற்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணங்கள் எவை?

முதற்காரணம் - சுத்தமாயை
துணைக்காரணம் - சிவசக்தி (திருவருட்சக்தி)
நிமித்தகாரணம் - சிவபெருமான்

7. சித்தாந்தம் என்ற சொல்லின் பொருள் என்ன?

முடிந்த முடிபு

8. முதன் முதலில் தமிழ் மொழியில் சித்தாந்தம் என்ற சொல்லைக் கையாண்டவர் யார்?

திருமூலர்.

"சிவமாதல் வேதாந்த **சித்தாந்தமாகும்**
அவமவ மாகுமவ்வவ் விரண்டுஞ்
சிவமாஞ் சதாசிவன் செய்வதொன்றானானால்
நவமான வேதாந்த ஞான **சித்தாந்தமே**" -திருமந்திரம் - 2393.

9. சைவசித்தாந்தம் என்றதொடரைக் கையாண்ட ஓர் ஆகமத்தின் பெயரைத் தருக?

காமிய ஆகமம்.

10. சைவ சித்தாந்த நூல்கள் யாரைக் கடவுள் என்று அறுதியிட்டுக் கூறுகின்றன?

ஒருவன், ஒருத்தி, ஒன்று என உலகம் முத்திறப்பட்டுத் தோன்றி ஒடுங்குவதால் அதை ஆற்றுபவன் ஒருவன் இருக்கவேண்டும்; அவனே கடவுள் என்று சிவஞானபோதம் முதலாம் சூத்திரத்தில் அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ளது.

11. சைவ சித்தாந்தம் கூறும் பதியின் இரண்டு நிலைகளும் (இலக்கணங்களும்) எவை?

1) சொரூபலக்கணம்
2) தடத்தலக்கணம்

12. சொரூபலக்கணத்தில் பதியின் இயல்புகள் எவ்வாறு அமைந்திருக்கும்?

பதியின் உண்மைத்தன்மை காண்பிக்கப்படும். இந்நிலையில் அவருக்குப் பெயர், குணம், குறி ஏதும் இல்லை.
அருவ, உருவ, அருவுருவத் திருமேனிகள் இல்லை.
மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் அறியப்படாத அனாத முத்த சித்துருவாகப் பதி விளங்குவார். இந்நிலையில் அவர் பரமசிவம், சிவம், மனாதீதன் எனக் குறிப்பிடப்படுவார்.

13. தடத்தலக்கணத்தில் பதியின் இயல்புகள் எவ்வாறு அமைந்திருக்கும்?

உயிர்களின் மேல் பெருங்கருணை கொண்டு பல படிகள் இறங்கிவந்து கை, கால் முதலியன அமையப்பெற்ற உருவமெடுத்து ஐந்தொழில்களை ஆற்றி அவ்வுயிர்களுக்கு அருள் செய்யும் நிலை தடத்தலக்கணம் ஆகும்.

14. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களும் எவை?

இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்)

15. உலகவாழ்க்கையையொட்டி சிவம், சக்தி இரண்டையும் எவ்விதம் கூறுவர்?

நாயகன், நாயகி.

தொடரும்..

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
தர்மாசிரியர். சாமித்தம்பி பொன்னுத்துரை B.A. (சிறப்பு)

# திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையம் கொழும்பு.

## நடப்பு ஆண்டுக்கான புதிய உத்தியோகத்தர் தெரிவு - 2016

26-06-2016 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.20 மணியளவில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற எமது மேற்படி பயிற்சிமைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருடத்திற்கான நிருவாகசபையின் புதிய உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

1. தலைவர் (இயக்குநர்) பதவிவழி- சித்தாந்தச்செம்மணி செல்லையா நவநீதகுமார்.M.A.

2. துணைத்தலைவர் - திருமுறைநெறிச்செல்வர் கந்தையா ஜெகதீசன்

3. இணைச் செயலாளர் 1) சித்தாந்தரத்தினம் சாமித்தம்பி பொன்னுத்துரை B. A. Hons.
   2) திருமுறைநெறிச்செல்வர் கிருஷ்ணானந்தி இராஜேந்திரா

4. பொருளாளர் - சித்தாந்தரத்தினம் வேலுப்பிள்ளை கனகசபாபதி – M.Charted Acct.

5. துணைப்பொருளாளர் - கலைவாணி இரத்தினஜோதி – AIB

6. செயற்குழு உறுப்பினர் :
   1) சித்தாந்தரத்தினம் பத்மினி இராஜேந்திரா - Dip in H.Science
   2) சித்தாந்தரத்தினம் ஸ்ரீகார்த்திகைக்குமரன் சரவணமுத்து – வைத்தியகலாநிதி
   3) சித்தாந்தரத்தினம் வேதநாயகம் இரகுநாதன் - Bsc.Eng.
   4) சித்தாந்தரத்தினம் பரமக்குட்டி ஸ்ரீஸ்கந்தராஜா - DCM
   5) திருமுறைநெறிச்செல்வர் மாணிக்கம் கணபதிராஜா
   6) சித்தாந்தரத்தினம் சிதம்பரம் சிவானந்தராஜா
   7) சித்தாந்தரத்தினம் சற்சொரூபவதி சுபமுரளிதரன் - MBA
   8) திரு. நாகேந்திரன் சற்குணசீலன்
   9) திருமுறைநெறிச்செல்வர் உதயகௌரி செல்வராஜ் – தமிழ்பட்டய சான்றிதழ்
   10) திருமுறைநெறிச்செல்வர் பிரியதர்சினி செல்வராஜா
   11) சித்தாந்தரத்தினம் மல்லிகா சிவராஜா - Dip. in English

7. கணக்காய்வாளர் – திருமுறை நெறிச்செல்வர் சுப்பிரமணியம் குமாரசாமி B.A.

# தென்னிந்தியத் திருத்தலயாத்திரை 2016

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மாலை சுமார் 6.30 மணியளவில் **திருப்பாச்சிலாச்சிராமம்** சென்றோம். இவ்விடம் இன்று திருவாசி என்று வழங்கப்பெறுகிறது.



இறைவன் - மாற்றறிவரதர், சமீவனேஸ்வரர் (சமீ - வன்னி)
இறைவி - பாலாம்பிகை, பாலசௌந்தரி
தலமரம் - வன்னி
தீர்த்தம் - சிலம்பாறு

சம்பந்தர் (துணிவளர்திங்கள்), சுந்தரர் (வைத்தனன் தனக்கே) பாடல் பெற்றதலம்.

திருஞானசம்பந்தர் கொல்லிமழவன் மகளின் முயலகன் நோய் நீக்கியதலம். இதனால் இங்கு நடராஜரின் திருவடியில் முயலகன் இல்லை. பதிலாகப் பாம்பு உள்ளது. இவர் சர்ப்பநடன மூர்த்தி எனப்படுவார்.

சுந்தரர் பொன்பெற்ற தலம்.

முதற் கோபுரத்திற்கும் இரண்டாம் பிரகாரத்திற்கும் இடையே உள்ள மண்டபத்தில் சம்பந்தர் முயலகன் நோய் தீர்த்த சிற்பங்கள் உள்ளன.

சுவாமி சந்நிதியில் சுந்தரருக்குப் பொற்கிழி வழங்கிய மண்டபமுண்டு. இங்குள்ள சுந்தரர் திருவுரு இரு கரத்திலும் தாளம் ஏந்திப்பாடும் அமைப்பில் உள்ளது.

அம்பாள் சந்நிதி சுவாமியை நோக்கி மேற்கு நோக்கி விளங்குகிறது. எதிரிலே திருக்குளமும் வன்னிமரமும் இருக்கின்றன.

பிரமன், லக்குமி, உமையம்மை வழிபட்டதலம்.

இங்கு வழிபாடு முடித்துத் திருச்சிராப்பள்ளிக்கு வந்தோம். அன்று இரவு "யாத்திரி நிவாஸ்" என்ற விடுதியிலே தங்கினோம். இது ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தால் சிறந்த முறையில் நடத்தப்படுகிறது.

07-01-2016 அன்று காலை **திருப்பைஞ்ஞீலிக்குச்** சென்றோம்.



இறைவன் - நீலகண்டேஸ்வரர், ஞீலிவனநாதர், கதலிவசந்தர்
இறைவி - விசாலாட்சி
தலமரம் - ஞீலிவாழை
தீர்த்தம் - அப்பர் தீர்த்தம்

கிழக்கு நோக்கிய கோயில் முன்பு இராசகோபுரம். இரண்டாம் இராசகோபுரவாயிலில் அப்பருக்குக் கட்டமுது (பொதிச்சோறு) கொடுத்து அருளி மறைந்த இடம். கோயில் நிலமட்டத்திற்குக் கீழே அமைந்துள்ளது. இப்பெருமான் சோற்றுடையீசர் எனவும் பெயர்பெறுவர். அர்த்தமண்டபத்தில் வசிட்ட முனிவருக்கு இறைவன் நடராஜ வடிவில் நடனக் காட்சியருளிய இடம் உண்டு.

இரு அம்பாள் சந்நிதி. பிரதான அம்பாள்சந்நிதி சுவாமிக்கு இடப்பால் கிழக்கு நோக்கியது. மற்றயது தெற்கு நோக்கியது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர்.

தலமரமான ஞீலிவாழை இங்குதான் உண்டு. வேறு இடத்தில் பயிராவதில்லை. கருவறைக்கு வடபால் இவ் வாழை மரத்தைக்காணலாம். இது ஒரு தனிஇனம். இதன் இலை, காய், கனி இறைவனுக்கு நிவேதித்து தண்ணீரில் விடுவார்கள். இவற்றை மக்கள் பயன்படுத்தினால் நோய் வருதல் இன்றும் கண்கூடு. இங்கு வழிபட்டு **அன்பிலாலந்துறை** சென்றோம்.



ஊர் - அன்பில்
கோயில் - ஆலந்துறை
இறைவன் - சத்திய வாகீஸ்வரர், ஆலந்துறையார், பிரமபுரீஸ்வரர்.
இறைவி - சௌந்தரநாயகி.
தலமரம் - ஆலமரம்.
தீர்த்தம் - சந்திர தீர்த்தம்

சம்பந்தர், அப்பர் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர்.

கிழக்கு நோக்கிய கோயில் முன்னால் ஐந்து நிலை இராசகோபுரம். இங்கு நின்று பார்த்தால் மூலவர் சந்நிதி தெரியும்.

வாகீச முனிவர், பிரமன் வழிபட்ட தலம்.

கோஷ்ட மூர்த்தங்களாக தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் இடத்தில் விஷ்ணு, பிரமா ஆகியோர் உள்ளனர். மூலவர் சிவலிங்கத்திருமேனி சுயம்பு மூர்த்தி. சதுர ஆவுடையார். அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது.

இக்கோயிலை வழிபட்டுத் **திருப்பட்டூர்** சென்றோம்.

திருப்பட்டூர் பழைமையான சிவாலயம். இது பாடல் பெற்ற தலமன்று.

இறைவன் - பிரம்மபுரீஸ்வரர்
இறைவி - பிரம்மசம்பத்கௌரி
தலமரம் - மகிழ்
தீர்த்தம் - பிரம்ம தீர்த்தம், பகுள தீர்த்தம், சண்முகநதி.


ஐந்து நிலை இராச கோபுரத்துடன் கிழக்கு நோக்கிய சுவாமி சந்நிதி. மூலவர் சுயம்பு மூர்த்தி. சதுர ஆவுடையார். பிரமனின் தலை எழுத்தை மாற்றி அருள்புரிந்ததால் பிரம்மபுரீஸ்வரர்.

பிரம்மாவிற்குக் கோயில் இல்லை என்பது பொதுவான கருத்து. இருந்தாலும் சிவாலயங்களிலே கருவறை வடபுறம் கோமுகைக்கு மேலுள்ள கோஷ்டத்திலே பிரம்மா இருப்பார்.

இங்கு சுவாமிக்குத் தென்புறம் கிழக்கு நோக்கிய சந்நிதியாகத் தனிக் கோயிலிலே பெரிய அமைப்பிலே பிரம்மா வீற்றிருக்கிறார். இங்கு வருவோர் தமது ஜாதகத்தைப் பிரம்மாவிடம் வைத்துப் பிரார்த்திக்கின்றனர். அவர் தம் தலை எழுத்தை மாற்றி அமைப்பார் என்று ஒரு நம்பிக்கை உண்டு.

பிரம்மா சந்நிதிக்குத் தென்புறம் பதஞ்சலி முனிவர் சந்நிதி உண்டு. அங்கே அமைதியாய்த் தியானத்தில் இருந்து வழிபாடு செய்கிறார்கள்.

பிரம்மாவால் பூசிக்கப்பட்ட பன்னிரண்டு சிவலிங்கங்கள் இங்கு உண்டு. கொடிமரத்திற்கு வடபால் அம்பாள் தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ளார். இங்கு வழிபட்டு **திருவானைக்கா** நோக்கிப் புறப்பட்டோம்.



திருவானைக்கா பஞ்சபூத தலங்களில் அப்புத்தலமாகும்.

இறைவன் - ஜம்புகேஸ்வரர், அப்புலிங்கேஸ்வரர், ஆனைக்கா அண்ணல், வெண்ணாவலீசர், ஜம்புநாதர், நீர்த்திரள் நாதர்.
இறைவி - அகிலாண்டேஸ்வரி.
தலமரம் - வெண்ணாவல். (ஜம்பு)
தீர்த்தம் - காவிரி

சம்பந்தர் மூன்றுபதிகம், அப்பர் மூன்று பதிகம், சுந்தரர் ஒருபதிகம் பாடியுள்ளனர்.

ஆனையும், சிலந்தியும் வழிபட்ட தலம். ஆனை வழிபட்டதால் ஆனைக்கா எனப் பெயர்பெற்றது. சிலந்தி பின் கோட்செங்கட்சோழ அரசனாகப் பிறந்து அவன், யானை புகாத வண்ணம் மாடக்கோயில் எழுபது அமைத்தான். சுவாமி கருவறையில் ஒன்பது வாயில் கொண்ட சாளரம் உள்ளது. கருவறையில் முன்பு நீர் ஊறிக்கொண்டிருந்தது இப்போது நீர்க் கசிவு உண்டு.

அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கித் தனிக் கோயிலாக உள்ளது. நாங்கள் கோயிலுக்குச் சென்ற நேரம் கோயில் நடை சாத்த ஆயத்தம் நடந்து கொண்டிருந்தது. அவசரமாகத் தரிசனம் முடித்தோம். அன்று பகல் திரு இரத்தினசபாபதியின் சகோதரி கிருஷ்ணவேணி அவர்களுடைய வீட்டிலே மதிய உணவு அனைவரும் உண்டு மகிழ்ந்தோம். அன்று மாலை திருச்சியிலே கடைகளுக்குச் சென்றோம்.

08-01-2016 அன்று காலையிலே **திருஎறும்பியூருக்குச்** சென்றோம். மலை மேலே கோயில். 125 படி ஏறிச் செல்ல வேண்டும். கிழக்கு நோக்கிய சந்நிதி. கல்லாலான கருவறை. பிப்பிலீச்சரம், திருஎறும்பிபுரம், இரத்தினகூடம், மதுவனபுரம் முதலான பல பெயர்கள் இத்தலத்திற்கு உண்டு. இந்திரனும் தேவர்களும் எறும்பு வடிவம் கொண்டு வழிபட்ட தலமாதலால் எறும்பியூர் எனப் பெயர் பெற்றது.

இறைவன் - எறும்பீஸ்வரர், பிப்பிலிகேஸ்வரர் (பிப்பிலி - எறும்பு) மாணிக்கநாதர், மதுவனேஸ்வரர்
இறைவி - சௌந்தரநாயகி, மதுவனேஸ்வரி, நறுங்குழல்நாயகி, இரத்தினாம்பாள்.
தலமரம் - வில்வம்
தீர்த்தம் - பிரமதீர்த்தம்



அப்பர் இரண்டு பதிகம் பாடியுள்ளார். “எறும்பியூர் மலை மேல் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே” என்று அப்பர் பெருமான் கூறியது போன்று நாமும் மூலவரைத் தரிசித்தோம்.

மூலவர் மண்புற்றாக மாறியிருப்பதால் நீர்படாமல் பாதுகாக்கப்படுகிறது. தாருகாசூரனை அழிக்க இந்திரனும் தேவர்களும், பிரமன் கூறிய வண்ணம் அசுரனுக்குத்தெரியாத வண்ணம் எறும்பு வடிவெடுத்துச் சிவலிங்க மூர்த்தியை வழிபட்டனர். லிங்கத்தில் எண்ணெய்ப் பசையிருந்ததால் மேலேறி வழிபட முடியாதிருந்ததால் இறைவன் புற்றாக மாறி எறும்புகள் மேலேறிப் பூசை செய்யத் தாம் சொரசொரப்பான திருமேனி கொண்டார். எறும்புகள் மேலேற வசதியாய்ச் சாய்ந்தும் பூசையை ஏற்றுக்கொண்டார். மூலவர் வடிவம் வடபால் சாய்ந்துள்ளது.

மலை மேலே உள், வெளி என இருபிரகாரம் உண்டு. வெளிப்பிரகாரத்தில் தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதி தனிக் கோயிலாயுண்டு.


இங்கு வழிபட்டுத் **திருநெடுங்களம்** சென்றோம். திருஎறும்பியூர்க் கோயிலுடன் இணைந்த கோயில்.



இறைவன் - நித்திய சுந்தரேஸ்வரர், நெடுங்களநாதர்
இறைவி - மங்கள நாயகி, ஒப்பிலா நாயகி
தலமரம் - வில்வம்
தீர்த்தம் - அகத்திய தீர்த்தம், சுந்தர தீர்த்தம்.

"பூவொடு நீர் சுமக்கும் நின்னடியார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே" என்ற சம்பந்தர் இடர் களை பதிகம் இடம் பெற்ற தலம். கிழக்கு நோக்கிய இராஜகோபுரம். மூலவர் இடர் களை மூர்த்தி. நிறைவான தரிசனம். அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது, தனிக் கோயில். இங்கிருந்து **திருப்பனந்தாள்** சென்றோம்.

பனையின் தாளில் இறைவன் எழுந்தருளி இருப்பதால் திருப்பனந்தாள் எனப்படும். தலமரமும் பனை. தாடகை வழிபட்ட தலமாதலால் தாடகையீச்சரம். ஒருநாள் தாடகை மாலை சாத்தும் போது ஆடை நெகிழ, அதை இரு முழங்கைகளாலும் பற்றி மாலை சாத்த முடியாது மனம் வருந்த இறைவன் இரங்கித் திருமுடி சாய்த்து மாலையை ஏற்று அருள் புரிந்தார். அன்று முதல் சாய்ந்திருந்த மூர்த்தியைக் குங்கிலியக் கலய நாயனார் நிமிரச் செய்தார்.



இறைவன் - செஞ்சடையப்பர், அருணஜடேஸ்வர் தாலவனேஸ்வரர் (தாலம் - பனை)
இறைவி - பிருகந்தநாயகி, பெரியநாயகி, தாலவனேஸ்வரி.
தலமரம் - பனை
தீர்த்தம் - பிரமதீர்த்தம், ஐராவததீர்த்தம், தாடகைதீர்த்தம்.

சம்பந்தர் பதிகம் ஒன்று பாடிய தலம்.

மேற்கு நோக்கிய ஆலயம். மூலவர் சுயம்பு மூர்த்தி. அம்பாள் சந்நிதி சுவாமிக்கு வலப்பால் மேற்கு நோக்கிய சந்நிதி. அன்று சிறப்பான அபிஷேகம் நடைபெற்றது. அபிஷேக ஆராதனையில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எமக்கு கிட்டியது. தருமை ஆதீனத்திற்கு சொந்தமான கோயில். ஸ்ரீ குமரகுருபரரால் உருவாக்கப்பட்ட காசி மடம் என்னும் திருப்பனந்தாள் ஆதீனமும் பக்கத்தே உள்ளது. கோயில் வழிபாடு முடித்து ஆதீனத்திற்கும் சென்று அங்கிருந்து **திருப்புகலூர்** சென்றோம்.

மாலை 6.00 மணி அளவில் திருப்புகலூர் சென்றோம்.

உயிர்கள் இறைவன் திருவடிகளைப் புகலாயடைந்த தலமாதலாற் திருப்புகலூர் ஆயிற்று என்பர்.

திருப்புகலூர், திருப்புகலூர்வர்த்தமானீச்சரம் என இரு பாடல் பெற்ற தலங்கள் ஒன்றாயுள்ளன.

திருநாவுக்கரசு நாயனார் "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" என்று பாடிச் சிவனடி சேர்ந்த தலம்.

சுந்தரருக்கு இறைவன் செங்கட்டிகளைப் பொன்கட்டிகளாக மாற்றிக் கொடுத்ததலம்.

முருகநாயனார் அவதாரத்தலம். மடம் அமைத்துத் தொண்டு செய்த இடம். முருக நாயனார் திரு மடத்தில் சம்பந்தர், அப்பர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் கூடியிருந்து மகிழ்ந்த செய்தி பெரிய புராணத்திலுண்டு.

வேளாக்குறிச்சி ஆதீனத்துக் கோயில். ஆலயத்தின் முன்பு ஆதீனம் உள்ளது.

இறைவன் - அக்கினி புரீஸ்வரர், சரண்யபுரீஸ்வரர், கோணப்பிரான்.
இறைவி - சூளிகாம்பாள், கருந்தார்குழலி.
தலமரம் - புன்னை
தீர்த்தம் - அக்கினி தீர்த்தம்
சம்பந்தர் 2 பதிகம் அப்பர் 5 பதிகம்
சுந்தரர் 1 பதிகம் பாடிய தலம்
திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்திற்கு
சம்பந்தர் ஒருபதிகம் பாடியுள்ளார்.



நாற்புறமும் அகழியாற் சூழப்பட்ட ஆலயம். கிழக்கு நோக்கிய ஐந்து நிலை இராச கோபுரம். உட்கோபுரம் மூன்று நிலை.

மூலவர் கோணப்பிரான் என்ற பெயருக்கேற்ப வாணாசூரன் பெயர்த்தெடுக்க முயன்றதால் சற்று வடக்கே சாய்ந்துள்ளார். மூலவருக்குப்பக்கத்தில் சந்திரசேகரர் தனிச்சந்நிதி இருக்கிறது. இவர் இங்கு பிரதான மூர்த்தியாயுள்ளார். சுவாமிக்கு வலப்பால் திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் தனிக்கோயிலாயுள்ளது. அழகான மூலவர். அம்பாள் மனோன்மணி. உற்சவ மூர்த்திகளுள் அக்கினி இரண்டு முகம், ஏழு கரம், மூன்று பாதம், நாலு கொம்பு, ஏழு ஜ்வாலைகளுடன் கூடிய அழகான வடிவம். வலப்பால் தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதி. அப்பர் சுவாமிகள் விழா சித்திரைச் சதயத்திற்கு முதற் பத்து தினங்கள் சிறப்பாக நடைபெறுகிறது. இங்கிருந்து **செங்காட்டங்குடி** சென்றோம்.

(தொடரும்...)

சித்தாந்தச்செம்மணி, சைவப்புலவர்
செல்லையா நவநீதகுமார் எம். ஏ.

சென்ற இதழின் தொடர்ச்சி

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்

## சுந்தரமூர்த்தி நாயனார்

## ஊர்த்தொகை

7 ஆம் திருமுறை கோயிற்றிறம்
பண்:- பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

**காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்**
**கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர் அரசே கொழுநற் கொல்லேறே**
**பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே**
**மாட்டூர் அறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே.** 1

(ப-ரை) காட்டூர் - காட்டூரில் எழுந்தருளிய, கடலே - கருணைக் கடலே, கடம்பூர் - கடம்பூரில் வீற்றிருக்கும், மலையே - குணக்குன்றமே, கானப்பேரூராய் - திருக்கானப்பேரூரில் எழுந்தருளியுள்ளவரே, கோட்டூர் - திருகோட்டூரில் வீற்றிருக்கும், கொழுந்தே - கொழுந்தீசரே, அழுந்தூர் - திருவழுந்தூரிலுள்ள, அரசே - அரசரே, கொழுநல் - கொழுத்த நல்ல, கொல்லேறே - பகைவரைக் கொல்லுகின்ற ஏறு போன்றவரே, பாட்டூர் - பாட்டினாற் புகழ்ந்து பேசும் ஊர்களில், பலரும் - பலராலும், பரவப்படுவாய் - துதிக்கப் பெறுகின்றவரே, பனங்காட்டூரானே - திருப்பனங்காட்டூரில் வீற்றிருப்பவரே, மாட்டூர் - இடபத்தை ஊர்ந்தருளுகின்ற, அறவா - அறத்தின் வடிவினரே, உன்னை - கடவுளாகிய உம்மை, மறவாது - மறவாமல், பாட - பாடுமாறு, பணியாய் - பணித்தருள்வீராக என்றவாறு.

**கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய் குழகா குற்றாலா**
**மங்குல் திரிவாய் வானோர் தலைவா வாய்மூர் மணவாளா**
**சங்கக் குழையார் செவியா அழகா அவியா அனலேந்திக்**
**கங்குல் புறங்காட் டாடீ அடியார் கவலை களையாயே.** 2

(ப-ரை) கொங்கில் - கொங்குநாட்டில், குறும்பில் - குறும்பூரிலுள்ள, குரக்குத்தளியாய் - குரக்குத்தளியையுடையவரே, குழகா - குழகரே, குற்றாலா - திருக்குற்றாலத்தை உடையவரே, மங்குல் திரிவாய் - மேகத்திற் சஞ்சரிப்பவரே, வானோர் தலைவா - தேவர்களின் தலைவரே, வாய்மூர் - திருவாய்மூரில் வீற்றிருக்கும், மணவாளா - மணவாளரே, சங்கம் குழை ஆர் - சங்கக்குழையணிந்த, செவியா - திருச்செவியையுடையவரே, அழகா - அழகரே, அவியா - கெடாத, அனல் ஏந்தி - தீயேந்தி, கங்குல் - இரவில், புறங்காட்டு ஆடி - புறங்காட்டில் ஆடுபவரே, அடியார் கவலை - அடியவர்களது துன்பத்தை, களையாய் - விலக்கியருள்வீராக என்றவாறு.

**நிறைக்காட் டானே நெஞ்சத் தானே நின்றி யூரானே**
**மிறைக்காட் டானே புனல்சேர் சடையாய் அனல்சேர் கையானே**
**மறைக்காட் டானே திருமாந் துறையாய் மாகோ ணத்தானே**
**இறைக்காட் டாயே எங்கட் குன்னை எம்மான் தம்மானே.** 3

(ப-ரை) நிறைக்காட்டானே - நிறைக்காட்டில் எழுந்தருளியவரே, நெஞ்சத்தானே - அடியவரது மனக்கோயிலில் வீற்றிருப்பவரே, நின்றியூரானே - திருநின்றியூரில் வீற்றிருப்பவரே, மிறைக்காட்டானே - கறைக்காட்டையுடையவரே, புனல்சேர் சடையாய் - நீர் பொருந்திய சடையையுடையவரே, அனல்சேர் கையானே - தீ சேர்ந்த கையையுடையவரே, மறைக்காட்டானே - திருமறைக்காட்டையுடையவரே, திருமாந்துறையாய் - திருமாந்துறையிலெழுந்தருளியவரே, மாகோணத்தானே - சிறந்த கோணமாமலையை உடையவரே, எம்மான் - எம்பெருமானே, தம்மானே - தம்பிரானே, உன்னை - உம்மை, எங்கட்கு - எளியோங்களுக்கு, இறைக்காட்டாய் - சிறிது காட்டியருள்வீராக என்றவாறு.

**ஆரூர் அத்தா ஐயாற் றமுதே அளப்பூர் அம்மானே**
**காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே**
**பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே**
**பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூர் அம்மானே.** 4

(ப-ரை) ஆரூர் - திருவாரூரில் எழுந்தருளிய, அத்தா - கடவுளே, ஐயாற்று - திருவையாற்றிலுள்ள, அமுதே - அமுதமானவரே, அளப்பூர்அம்மானே - அளப்பூரில் உள்ள தந்தையே, கார் ஊர் - மேகம் தவழ்கின்ற, பொழில்கள் புடைசூழ் - சோலைகள் பக்கங்களில் சூழப்பெற்ற, புறவில் - முல்லைநிலத்துள்ள, கருகாஊரானே - திருக்கருகாவூரை உடையவரே, பேரூர் உறைவாய் - திருப்பேரூரில் உறைவீராகிய, பட்டிப்பெருமான் - பட்டீச்சுரரே, பிறவா நெறியானே - பிறவாத நெறியாகிய வீடுபேற்று நெறியை உடையவரே, பார்ஊர் - உலகத்துள்ள, பலரும் - பலராலும், பரவப்படுவாய் - வழிபடப் பெறுபவரே, பாசூர் அம்மானே - திருப்பாசூரில் எழுந்தருளிய தலைவரே என்றவாறு.

**மருகல் உறைவாய் மாகா ளத்தாய் மதியஞ் சடையானே**
**அருகற் பிணிநின் அடியார் மேலஅகல அருளாயே**
**கருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே**
**பருகப் பணியாய் அடியார்க் குன்னைப் பவளப் படியானே.** 5

(ப-ரை) மருகல் உறைவாய் - திருமருகலில் உறைபவரே, மாகாளத்தாய் - மாகாளத்தை உடையவரே, மதியம் சடையானே - பிறையணிந்த அழகிய சடையை உடையவரே, அருகல் - வருந்துதற்குரிய, பிணி - நோய்கள், நின் அடியார் மேல் - தேவரீரின் அடியவர்கள் மேல் உள்ளனவற்றை, அகல - ஒழியும்படி, அருளாய் - அருள்புரிவீராக, கருகல் குரலாய் - கரிய திருமிடற்றையுடையவரே, வெண்ணிக்கரும்பே - வெண்ணியில் உறையும் கரும்பானவரே, கானூர் கட்டியே - கானூரில் எழுந்தருளிய பவளம் போன்ற திருமேனியை உடையவரே, அடியார்க்கு - அடியவர்க்கு, உன்னை - தேவரீரை, பருகப்பணியாய் - பருகுமாறு பணித்தருள்வீராக என்றவாறு.

**தாங்கூர் பிணிநின் னடியார் மேல அகல அருளாயே**
**வேங்கூர் உறைவாய் விளமர் நகராய் விடையார் கொடியானே**
**நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே**
**பாங்கூர் பலிதேர் பரனே பரமா பழனப் பதியானே.** 6

(ப-ரை) வேங்கூர் உறைவாய் - வேங்கூரில் வாழ்பவரே, விளமர் நகராய் - திருவிளமரை உடையவரே, விடையார்கொடியானே - இடபக்கொடியை உடையவரே, நாங்கூர்உறைவாய் - திருநாங்கூரில் வசிப்பவரே, தேங்கூர் நகராய் - தேங்கூர் நகரை உடையவரே, நல்லூர் நம்பானே - திருநல்லூரில் எழுந்தருளிய நம்பரே, பாங்கு ஊர் பலிதேர் பரனே - அழகிய ஊர்கள் தோறும் பலியினைத் தேர்கின்ற மிக்கோரே, பரமா - பரமரே, பழனப்பதியானே - திருப்பழனப் பதியையுடையாரே, நின்அடியார் மேல - தேவரீர் தம் அடியவர்கள் மேலனவாம், தாங்கூர் பிணி - தாங்கப்பெற்றுப் பரவுகின்ற பிணிகளை, அகல - விலகும்படி, அருளாய் - அருள் செய்யக் கடவீராக என்றவாறு.

**தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்**
**வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே**
**ஆனைக் காவில் அரனே பரனே அண்ணா மலையானே**
**ஊனைக் காவல் கைவிட் டுன்னை உகப்பார் உணர்வாரே. 7**

(ப-ரை) தேனைக் காவல்கொண்டு - தேனைத் தம்மிடத்துப் பொதிந்து வைத்துக்கொண்டு, விண்ட - மலர்ந்த, கொன்றை - கொன்றை மலர்களால் ஆகிய, செழுந்தாராய் - செழுமையாகிய மாலையை உடையவரே, வானைக் காவல்கொண்டு நின்றார் - விண்ணுலகைக் காத்து வாழ்கின்ற தேவர்கள், அறியா நெறியானே - அறியாத முத்திநெறியையுடையவரே, ஆனைக்காவில் - திருவானைக்காவில் எழுந்தருளிய, அரனே - ஆன்மாக்களது பிறவியையொழித்தருள்கின்றவரே, பரனே - மேலானவரே, அண்ணாமலையானே - திருவண்ணாமலையை உடையவரே, ஊனைக்காவல் - உடம்பினைக் காத்தலை, கை விட்டு - ஒழிந்து, உன்னை உகப்பார் - தேவரீரையே விரும்புவார், உணர்வார் - தேவரீரைத் திருவருள் உணர்த்த உணர்வார்கள் என்றவாறு.

**துருத்திச் சுடரே நெய்த்தா னத்தாய் சொல்லாய் கல்லாலா**
**பருத்தி நியமத் துறைவாய் வெயிலாய்ப் பலவாய்க் காற்றானாய்**
**திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை இடங்கொள் கயிலாயா**
**அருத்தித் துன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே. 8**

(ப-ரை) துருத்திச் சுடரே - திருத்துருத்தியி லெழுந்தருளிய சோதியானவரே, நெய்த்தானத்தாய் - திருநெய்த்தானத்தையுடையவரே, சொல்லாய் கல்லாலா - வேதங்கள் ஆராய்ந்தறிகின்ற கல்லாலின் கீழ் எழுந்தருளி யிருப்பவரே, பருத்தி நியமத் துறைவாய் - திருப்பருதி நியமத்து எழுந்தருளியிருப்பவரே, வெயில் ஆய் - பகலோனாகி, பலவாகி - பல பொருள்கள் ஆகி, காற்றானாய் - அவையன்றிக் காற்றுமா யிருக்கின்றீர், திருத்தித் திருத்தி - பல முறையும் அறியாமை நீக்கித் திருத்தம் செய்து, வந்து - எழுந்தருளி வந்து, என் சிந்தை - என் உள்ளத்தை, இடம்கொள் - இடமாகக் கொண்ட, கயிலாயா - திருக்கயிலாய மலையினரே, அருத்தித்து - விரும்பி, உன்னை அடைந்தார் - தேவரீரைச் சரண் அடைந்தவர்களது, வினைகள் - தீவினைகள், அகல - நீங்குமாறு, அருளாய் - திருவருள் புரியக்கடவாய் என்றவாறு.

**புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப் போதா மூதூரா**
**பொலிசேர் புரமூன் றெரியச் செற்ற புரிபுன் சடையானே**
**வலிசேர் அரக்கன் தடக்கை யைஞ்ஞான் கடர்த்த மதிசூடி**
**கலிசேர் புறவிற் கடவூ ராளீ காண அருளாயே. 9**

(ப-ரை) புலியூர் - பெரும்பற்றப் புலியூரில் விளங்கும், சிற்றம்பலத்தாய் - திருச் சிற்றம்பலத்தை யுடையவரே, புகலூர்ப் போதா - திருப்புகலூரில் எழுந்தருளிய அறிவுருவானவரே, மூதூரா - மூதூரை உடையவரே, பொலிசேர் - விளக்கமுற்ற, புரமூன்று - திரிபுரங்களும், எரிய - வெந்து சாம்பராகும்படி, செற்ற - சினந்த, புரி புன் சடையானே - முறுக்கிய புல்லிய சடையையுடையவரே, வலி சேர் - வலிமை வாய்ந்த, அரக்கன் - இராவணன்றன், தடக்கை - பெரிய கைகள், ஐஞ்ஞான்கு - இருபதையும், அடர்த்த - நெரித்தருளிய, மதிசூடி - பிறை சூடியவரே, கலிசேர் - ஒலிபொருந்திய, புறவில் - முல்லைநிலத்திலுள்ள, கடவூராளி - திருக்கடவூரை ஆள்பவரே, காண - தேவரீரை யான் காணும் வண்ணம், அருளாய் - அருள் செய்வீராக என்ற வாறு.

**கைம்மா உரிவை அம்மான் காக்கும் பலவூர் கருத்துன்னி**
**மைம்மாந் தடங்கண் மதுர மன்ன மொழியாள் மடச்சிங்கடி**
**தம்மான் ஊரன் சடையன் சிறுவன் அடியன் தமிழ்மாலை**
**செம்மாந் திருந்து திருவாய் திறப்பார் சிவலோ கத்தாரே. 10**

(ப-ரை) கைம்மா - யானையினது, உரிவை - தோலையுடைய, அம்மான் - இறைவன், காக்கும் - எழுந்தருளியுள்ள, பலவூர் - பல திருத்தலங்களையும், கருத்துன்னி - மனத்தில் நினைத்து, மை - மை தீட்டிய, மா - மாவடுவகிர் அன்ன, தடம் - பெரிய, கண் - கண்களையும், மதுரமன்ன - மதுரமாகிய, மொழியாள் - மொழியையும் உடையவளாகிய, மடச்சிங்கடி - மடத்தினையுடைய சிங்கடியம்மையாரின், தம்மான் - அபிமான பிதாவும், சடையன் சிறுவன் - சடைய நாயனாரது புதல்வனும், அடியன் - அடித்தொண்டனும் ஆகிய, ஊரன் - நம்பியாரூரன் உரைத்த, தமிழ்மாலை - தமிழ்ப் பதிகமாலையை, செம்மாந்து இருந்து - இறுமாந்திருந்து, திருவாய் திறப்பார் - தமது திருவாயினைத் திறந்து ஓதுவோர், சிவலோகத்தார் - சிவலோகத்தை உடையவராவார் என்றவாறு.

திருச்சிற்றம்பலம்

உரைக்குறிப்பு : கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்.
உதவியவர் : வ. பேரின்பநாயகம்.


சைவநீதி முத்திங்கள் இதழ். பெறுமதி விபரம்
தனிப்பிரதி ரூபா 50.00 ஆண்டொன்றுக்கு ரூபா 300.
ஏனைய நாடுகளில் ஆண்டொன்றுக்கு £ 10. அல்லது US $ 15.

சாந்தா
அனுப்பவேண்டிய முகவரி :
C. Navaneethakumar
No. 4A, 1st Lane,
Ratmalana.
Tel. 077 900 8286

**சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.**

உ

திருச்சிற்றம்பலம்

# காலத்தால் மிக முந்திய சித்தாந்த சாத்திரம்

## வாகீசமுனிவரின் ஞானாமிர்தம்

நமது நாட்டில் நிலவும் சமயங்களுள் மிகவும் தொன்மை வாய்ந்தது சைவம். சமய நூலாராய்ச்சியும், புதைபொருளாராய்ச்சியும் சைவம் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னையது என்று குறிக்கின்றன. எனினும், நிலவுலகில் ஏனைப்பகுதிகளில் வாழும் பழங்குடிமக்களிடையே கடவுட்கொள்கை தோன்றி நிலவத்தொடங்கிய காலத்துக்கு முன்பிருந்தே நம் தமிழகத்தில் சைவம் நிலைபெற்றிருந்தது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் நூல்களில் கடவுள் என்ற சொல்லால் குறிக்கப்படும் பொருள் சிவபரம்பொருளேயாதலின், சிவத்தை முழு முதற் கடவுளாகக் கொண்டொழுகும் சைவம் தமிழ் மக்களின் உரிமைச் சமயம் என்பது தெளிந்த முடிபு.

முழு முதற்கடவுளைக் குறிக்கும் **சிவம்** என்னும் சொல் சங்ககால இலக்கியங்களில் காணப்படாமையால் சிவநெறி பிற்காலத்தே தோன்றியதாம் எனச் சிலர் கருதுவர்; வேறு சிலர், சிவம் என்பது வடசொல்லெனவும், எனவே, சிவநெறியாகிய சைவம் வடவர் வழி வந்ததெனவும் கருதுகின்றனர். சங்ககாலத்துச் சமய நூல்களோ, சமயநூற்கருத்துக்களைக் காட்டும் பேரிலக்கியங்களோ இதுகாறும் நமக்குக் கிடைத்தில. ஒரு சில புலவர்கள் ஓரொருகாலத்தில் பாடிய பாட்டுக்களிலிருந்து தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்ட பாட்டுக்களின் தொகுதிகளே இன்று **சங்க இலக்கியம்** என்ற பெயரால் நமக்குக் கிடைத்துள்ளன. பொருளிலக்கணத் துறைகட்குரிய இலக்கியமாகும் தகுதியுடைய பாட்டுக்களே இத்தொகை நூல்களில் தொகுக்கப்பட்டிருத்தலால், இவற்றையே முழுமையான இலக்கியங்களாகக் கொண்டு தமிழ் மக்களின் பழைய சமயவாழ்வு தேர்ந்து முடிபு காணமுயல்வது நிரம்பாது. ஆதலால், சங்கத்தொகை நூல்களில் சிவம் என்னும் சொல் காணப்படாமைபற்றி அது தமிழ்ச் சமயமன்று எனத் தள்ளக் கருதுவது அறமாகாது.

மக்கள் பிறந்து மொழிபயிலத் தொடங்கும்போதே தம்தாய் தந்தையரைக் குறித்து மொழியும் **அம்மா, அப்பா** என்ற சொற்கள் தூய தமிழ்ச்சொற்கள் என்பதை யாவரும் நன்கு அறிவர்; இச் சொற்களை அறிந்த பன்னாட்குப் பின்பே சிவம் என்னும் சொல் மக்கள் பேச்சு வழக்கில் வந்துசேரும். இந்த அம்மா அப்பா என்ற சொற்கள் இன்று நாம் பெற்று மகிழும் சங்கஇலக்கியங்களில் காணப்படவில்லையே, அதனால் பெற்றோர்களை அம்மா அப்பா என வழங்கும் வழக்காறு தமிழரிடையே கிடையாது என்று கூறுவது பொருந்தாதன்றே! மேனாட்டு ஆங்கிலமக்கள் தாயை **மம்மா** என்றும் தந்தையைப் **பப்பா** என்றும் வழங்கும் வழக்காறு உளது. அதைக்கண்டு, **அம்மா அப்பா** என்பது **மம்மா பப்பா** என்பவைகளின் திரிபுபோலக்கருதி, தமிழ் வழக்கன்று எனத் தள்ளிவிடக் கூடுமா? **ஸ்பீச்சு** என்னும் ஆங்கிலச் சொல்லோடு **பேச்சு** என்னும் தமிழ்ச் சொல் ஒத்திருப்பது பற்றி அது தமிழன்று என்று கருதமுடியுமா? ஆகவே பழந்தமிழ்த் தொகை நூல்களில் சிவம் என்னும் சொல் காணப்படாமைபற்றிச் சிவநெறியைத் தமிழ் நெறியன்று எனப் புறக்கணிக்கக் கருதுவது நேர்மையன்று என்பது தெளிவாம்.

சிவம் என்னும் சொல்பற்றி நிகழ்ந்த ஆராய்ச்சியில், வடமொழியில் மிகத் தொன்மை வாய்ந்த சமய நூல்களான **வேதங்களில் சிவம் என்னும் சொல் இல்லை**யென்பது விளங்கி விட்டது. வேதங்கள், இந்திரன், அக்கினி, உருத்திரன் முதலிய பல தெய்வங்களைக் குறித்து வழிபடும் தன்மை உடையவை; சிவநெறி முழுமுதற் பொருளாகிய கடவுள் ஒன்றே எனத் துணிந்து வழிபடும் சிறப்புடையது. எனவே, அது வேதங்களில் காணப்படுதற்கு இடமில்லை. பரம்பொருள் ஒன்றே எனத் தெளிந்துரைக்கும் வேதாந்த நூல்களான உபநிடதங்களுள் பழமையான நூல்களுள்ளும் சிவம் என்னும் சொல் வழக்கு இல்லை. எனவே, **சிவம் என்பது வட சொல்லன்று என்பது தேற்றம்**. மொழி நூல் துறையில் பெருமுயற்சி செய்து சொற்களின் உண்மை வடிவு காண்பான் பேராராய்ச்சி செய்த **கிரையர்சன்** என்ற மேனாட்டறிஞர், சிவம் என்பது வட சொல்லன்று என முடித்து அது தூய தமிழ்ச் சொல்லாம் எனத்தெளியவுரைத்துள்ளார். ஆதலால், சிவம் என்பது தமிழ்ச் சொல்லென்றும், அதனை மேற்கொண்டொழுகும் சிவநெறியாகிய சைவம் தமிழ் நெறியென்றும் இனிது விளங்குகின்றன. இடைக் காலத்தே முத்து, முகம், பவளம், மணி, தோகை முதலிய தூய தமிழ்ச் சொற்கள் பல வடமொழியில் ஏறி அம்மொழிக்கேற்ப இலக்கண முடிபு பெற்றது போல, இச் **சிவமென்னும் சொல்லும் வடநூல்களில் ஏறிச் சைவம், சிவானுபவம், சிவோகம் என்றாற்போலும் வடநூல் முடிபு பெற்றுள்ள**மை நினைவு கொள்ளத்தக்கது.

ஏனை எந்நாட்டுமக்களாலும் இறைவன் என்றும் முழுமுதற்கடவுள் என்றும் கருதப்படுவது எதுவோ, அதுவே தென்னாடுடைய மக்களால் சிவம் என்று கருதி மேற்கொள்ளப்பட்டுளது என்று **மாணிக்கவாசகர்** முதலிய சான்றோர்கள் கூறுகின்றனர். இதனாலும், சிவநெறி தென்னாட்டவர்க்கே சிறப்பாக உரிய கடவுள் நெறியென்பது தெளிவாகத் தோன்றுகிறது.

சிவம் என்னும் சொல் பற்றிய ஆராய்ச்சி இவ்வாறு இடம்பற்றியும் காலம் பற்றியும் வேறுபடத் தோன்றினும், சிவபரம்பொருள் எந்நாட்டவர்க்கும், எக்காலத்தவர்க்கும் ஒப்ப உரியராதலின், பொருளாகாத இவ்வாராய்ச்சியை இவ்வளவில் நிறுத்திக்கொள்வாம். இவ்வாறும் சில தடைகளை எழுப்பி மக்கள் உள்ளத்தைச் சிவநெறிக்கண் செல்லாதவாறு செய்யும் வடமொழியாளரும் தமிழரும் சிலர் இருப்பதனால் இத்துணையும் முதற்கண் எடுத்தோத வேண்டிய இன்றியமையாமை பிறந்தது.

தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், தன்னையொன்றும் கலத்தல் இன்மையின் தூயதாய், தான் ஏனை உயிர்ப்பொருளோடு உடனாயும், உயிரில் பொருளிடை ஒன்றாயும் கலந்து எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாய் இலங்கும் செம்பொருள் ஒன்றே; அதுவே **சிவம்**; உயிர்களும் நித்தமே எனினும் அவை எண்ணிறந்த பலவாகும். அவை, சிவத்தை நோக்கச் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையன; அனாதியே மலக்கலப்புற்று இருத்தலின், அவை அறியாமை இருள் சூழ்ந்து கிடப்பன; மலநீக்கம் குறித்து உடம்பொடு கூடி இவ்வுலகில் தோன்றி வினைகளைச் செய்து பிறப்பிறப்புக்களை எய்துவன. இவ்வுலகும், இங்கே உயிர்கள் நிற்றற்குரிய உடம்புகளும் **மாயை**யென்ற முதற்பொருளிலிருந்து சிவத்தால் படைக்கப்படுகின்றன. மாயையென்ற முதற்பொருளும் அனாதி நித்தமாயினும், சிவமும் உயிரும் போல அறிவுடைய பொருளன்று. மாயையினின்றும் தோன்றி அதன் கண்ணே ஒடுங்குவது பற்றி, மாயாகாரியமான உலகும் உடம்பும் மனமும் பிறவுமாகிய பொருள்கள்

தோற்றக்கேடு உடைமையால் அநித்தமாகும். இங்கே கூறிய மலம், வினை, மாயை என்ற மூன்றுமாகிய அறிவில் பொருள்கள் உயிர்களோடு தொடர்புற்றிருப்பதால் அவை **கட்டு** என்று வழங்கும். எனவே, **சிவம், உயிர், கட்டு** என்ற மூன்றும் சிவநெறியின் அடிப்படையான பொருள்களாம். இவற்றை வட நூல்கள் முறையே **பதி, பசு, பாசம்** என்று குறிக்கின்றன. இக்காலத்தில் தமிழ் மக்கள் வாழ்வுக்குரிய அரசியல் நெறிமுறைகள் ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருப்பது போல, மக்களுடைய அரசியல் சமய வாழ்வுகளில் வடமொழி செல்வாக்கு மிக்கிருந்த காலத்தில் இவை வடமொழியில் எழுதப்பட்டனவே தவிர வேறில்லை. வடமொழியில் இருப்பது கொண்டு விலக்கக் கருதுவதும், வடவர்க்கே உரியவென்பதும் அறிவுடைமையாகா என்பது இவ்வாற்றால் இனிது விளங்கும்.

இறை, உயிர், கட்டு என்ற மூன்றையும் சமய அடிப்படைப் பொருளாக வரையறுத்துக் கொண்டு நிலவும் சிவநெறி வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே நம் தமிழகத்தில் இருந்துவருகிறது. இறையாகிய சிவபரம்பொருள் இன்னவுரு இன்னநிறம் என்று கண்டுரைக்க முடியாத ஒன்றாதலின், அதனைக் **கந்து** வடிவில் வைத்து வழிபடுவது சங்ககால வழக்கு. கந்தும் நிலையமும் கொண்டு நிற்கும் **கந்துடைநிலை** சிவத்தை அறிவிக்கும் அடையாளம், குறி என்ற பொருள்படும் வடமொழியால் சிவலிங்கம் எனக் கூறப்படுகிறது. இன்று சிவன் கோயில்களில் திருவுண்ணாழியில் காணப்படும் சிவலிங்கம் யாவும் பண்டைச் சங்க காலக் **கந்துடை நிலைகளே**யாகும். ஏனைக் குறிஞ்சி முல்லை முதலிய நிலங்கட்குரிய தெய்வமெனத் தமிழ் நூல் கூறும் சேயோன், மாயோன் முதலிய தெய்வங்கள் பிற்காலத்தே சிவன்கோயில்களில் பரிவார தேவதைகளாக வகுக்கப்பெற்றன. ஆதலால், சங்ககாலத்துக் காணப்படும் கடவுள் நெறியே படிப்படியாக வளர்ந்து இன்று பெரிய பெரிய சிவத்தலங்களாகக் காட்சியளிக்கின்றனவே தவிர வேறில்லை. இவற்றைக் கூறுபடுத்தி விளக்கிக்கூறும் சமய நூல்கள் **ஆகமங்கள்** எனப்படும்.

ஒருகாலத்தே வேதம், வேதாந்தம், ஆகமம் என்ற இவை சமயத்துறையில் சிறந்த வடநூல்களாக விளங்கின. இன்றும் அவற்றை விலக்குவோர் இல்லை. அவற்றுள் இருக்கு முதலிய வேதங்கள் மந்திரம், பிராமணம் என இருவகையாக இயலுகின்றன. மந்திரங்கட்குப் பொருளுரைக்கும் உரைபோலப் பிராமணங்கள் உள்ளன. மந்திரங்கள் செய்யுள் போல உள்ளன. அவை பலவும், வருணன், இந்திரன், அக்கினி, சவிதா முதலிய பல தெய்வங்களைக் குறித்தும் அவற்றை வழிபடுவது குறித்துமே கூறுவனவாம். அவற்றால் முடிந்த பொருளாகக் காணப்படுவது **பல தெய்வ வழிபாடு** ஒன்றே. வேதங்களையும் அவற்றிற்குரிய ஐதரேயம் முதலிய பிராமணங்களையும் சேரக்கொண்டு அவற்றை வேதநூலின் **கர்ம காண்டம்** என வழங்குவதுமுண்டு.

வேதங்கட்குப் பின்னர் நிற்பன உபநிடதங்கள். இவ்வுபநிடதங்களை ஆராய்ந்த அறிஞர்கள், "ஈண்டு உணர்த்தப்படும் பொருள்கள் கர்மகாண்டத்தில் உணர்த்தப்பட்ட வற்றிலிருந்து **முற்றிலும் மாறுபட்டன;** அவை முத்தியின் தன்மையும் முத்தியடையும் சாதனமுமாம்; முதன்முதலில் நிஷ்காம கர்மாக்களைச் செய்து சித்த சுத்தியை அடைய வேண்டும்; பின்னர் ஆசிரியனை அடைந்து ஆத்ம விஷயமாய்ச் சிரவணம் செய்ய வேண்டும்; சிரவணம் செய்தவற்றை யுக்தியோடு கலந்து மனனம் செய்து அவற்றைத் தனதாக்கிக் கொள்ளவேண்டும். பின்னர் கடவுளைத் தியானம் செய்யவேண்டும். அவற்றால் அபரப்ரம்ம ப்ராப்தி அடையலாம். அதன் பின்னர் கடவுளருளால் ஞானம் அடைந்து **கடவுளோடு**

**கடவுளாய் ஒன்றாக** வேண்டும்; ஒன்றான பிறகு பிறப்பிறப்பு இல்லை; இவ்வுடலோடு இருக்கும்போதே ஒன்றாய் விட்டால் ஒருவனுக்கு இறப்புஇல்லை; அந்நிலையை **ஜீவன் முத்தி** என்பர். ஒன்றாக ஆவதற்கு முன்னரே அவன் இறப்பின், அந்த ஜீவன், பித்ருயாணம் தேவயாணம் என்ற இரண்டு மார்க்கத்துள் ஒன்றின் வழியாகப் பித்ரு லோகத்திற்கோ பிரும்மலோகத்திற்கோ கொண்டு போகப்படுகிறான்; கடவுளைத் தியானித்தல் பல்வகைப்பட்ட தாகலின், "உபாசனங்கள் பலவகைப்படும்[1] " என்று கூறுகின்றனர். இவ்வண்ணம் **உபநிடதங்கள்** பிரமம் ஒன்றே எனத் துணிந்து பிரமஞானம் பெறுதற்குரிய நெறிகளை உரைப்பது பற்றி வேதத்தின் ஞானகாண்டம் என்றும், வேதத்தின் முடிவில் நிற்பது பற்றி **வேதாந்தம்** என்றும் வழங்கும்.

வேத வேதாந்த நூல்களின் செயல் முறைகளிலும், கருத்து வகைகளிலும் நாளடைவில் மாறுபாடுகளும் வேறுபாடுகளும் தோன்றின. அதனால், பௌத்தம் முதலிய சமயங்கள் பிறந்து வளர்ந்தன. வேத வேதாந்த நூல்கட்குப் புத்துரைகாணும் அறிஞர் பலர் உளராயினர். அவருட் பலரும் தத்தம் கலைப்புலமை கருவியாகப் பெரிய பெரிய விரிவுரைகள் கண்டனர். பின்னர் எழுந்த **பிரமசூத்திரத்துக்கு** இவ்வாறே பேருரைகள் பல உண்டாயின. சங்கரர், இராமானுசர், மத்துவர், சீகண்டர் முதலியோர் வகுத்துரைத்த பேருரைகள் பலரைத் தம்தம் வழியில் ஈர்த்தன. இவ்வாற்றால் சமயத்துறையில் கருத்து வேற்றுமைகளும் தெளிவின்மையும் சிறந்து நின்றன.

வேத வேதாந்த நூற்றுறையில் கலக்கம் பெருகிவருங்கால் ஆகமங்களின் பொருளாராய்ச்சியும் செயற்றிறங்களும் ஆராயப்பட்டன. பண்டைநாள் முதல் இருந்துவரும் ஆகமங்கள் பலவற்றையும் ஆராய்ந்து **சிவாகமம்** தேர்ந்து கொள்ளப்பட்டன. அவை காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும். இவற்றின் விளக்கம் குறித்து **உபாகமங்கள்** பல உண்டாயின. இவற்றின் பொருளியல்பு கண்ட அறிஞர், சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு பாதங்களாக இவற்றைப் பாகுபாடு செய்தனர். இவற்றைத் தனித்தனி எடுத்துரைப்பனவும், ஒரு சிலவற்றை வரைந்துகொண்டு உரைப்பனவும் என ஆகமங்கள் பலதிறப்படுகின்றன. இச் சிவாகமங்கள், பதி, பசு, பாசம் என முன்னர்கூறிய பொருள் மூன்றையும் அறுதியிட்டு முடிவுகட்டிக் கூறுவது பற்றி, **சித்தாந்தமென்று** வழங்கின. "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்" என்றும், "வேதசாரம் இதம் தந்த்ரம் சித்தாந்தம்" என்றும் சான்றோர் கூறுதல் காண்க.

வேதாந்த நூல்கள் உயரிய நடையில் பிரமஞானத்தையும் அதற்குரிய சாதனவகையினையும் உணர்த்தி வந்தன; அதனால் அவை வடமொழிவல்ல பெரும் புலவர்களிடையே இருந்து ஞானப் பணி புரிந்து வந்தன. ஆயினும் அவை கருத்து வேற்றுமை மிகுந்தனவேயன்றி யாவரும் உணரத்தக்க எளிய நிலையை அடையவில்லை. அவற்றால் பெரிதும் உயர்த்திக் கூறப்பட்ட வேள்வி முதலிய செயல்வகைகள் மாறுபட்டெழுந்த பௌத்த சயின சமயங்களின் வளர்ச்சியால் நாட்டில் செல்வாக்கிழந்து மறைந்தன. சிவாகமங்கள் வடமொழி பயின்றோர் இனிது உணரத்தக்க நிலையில் எளிய நடையில் அமைந்து விளங்கின. அதனால் அவற்றின் செல்வாக்கு ஓரளவு குறையாமலே இருந்து வந்தது. ஆங்காங்கே மக்களிடையே தொன்றுதொட்டு வந்துகொண்டிருந்த கோயில் வழிபாட்டுச் சைவ நெறி குன்றாமலே இருந்து வந்தது.

தொடரும்...

[1] History of Sanskrit Literature P.S.S. Sastri. P.165-6

# நினைவிற் கொள்வதற்குரிய வழிபாட்டு நாள்கள்

## துர்முகி வருடம் ஆடி மாதம்

| தமிழ்த் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| 01 | 16-07-2016 | சனி | ஆடிப்பிறப்பு. |
| 02 | 17-07-2016 | ஞாயிறு | பிரதோஷ விரதம். |
| 04 | 19-07-2016 | செவ்வாய் | பூரணை விரதம். |
| 08 | 23-07-2016 | சனி | சங்கடஹர சதுர்த்தி விரதம். |
| 13 | 28-07-2016 | வியாழன் | கார்த்திகை விரதம், மூர்த்தி நாயனார் குருபூசை, புகழ்ச்சோழ நாயனார் குருபூசை. |
| 16 | 31-07-2016 | ஞாயிறு | பிரதோஷ விரதம். கூற்றுவ நாயனார் குருபூசை |
| 18 | 02-08-2016 | செவ்வாய் | ஆடி அமாவாசை விரதம். |
| 21 | 05-08-2016 | வெள்ளி | ஆடிப் பூரம். |
| 22 | 06-08-2016 | சனி | சதுர்த்தி விரதம். |
| 24 | 08-08-2016 | திங்கள் | ஷஷ்டி விரதம், பெருமிழலைக் குறும்ப நாயனார் குருபூசை. |
| 26 | 10-08-2016 | புதன் | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, சேரமான் பெருமாள் நாயனார் குருபூசை. |
| 28 | 12-08-2016 | வெள்ளி | வரலக்ஷ்மி விரதம். |
| 29 | 13-08-2016 | சனி | கலியநாயனார், கோட்புலி நாயனார் குருபூசை |
| 31 | 15-08-2016 | திங்கள் | பிரதோஷ விரதம். |

## துர்முகி வருடம் ஆவணி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | 17-08-2016 | புதன் | மாதப்பிறப்பு. |
| 02 | 18-08-2016 | வியாழன் | பூரணை விரதம். |
| 05 | 21-08-2016 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு, சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 08 | 24-08-2016 | புதன் | கார்த்திகை விரதம். |
| 12 | 28-08-2016 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு. |
| 13 | 29-08-2016 | திங்கள் | செருத்துணை நாயனார் குருபூசை, பிரதோஷ விரதம். |
| 14 | 30-08-2016 | செவ்வாய் | புகழ்த்துணை நாயனார், அதிபத்த நாயனார் குருபூசை. |
| 15 | 31-08-2016 | புதன் | இளையான்குடிமாற நாயனார் குருபூசை. |

| | | | |
|---|---|---|---|
| 16 | 01-09-2016 | வியாழன் | அமாவாசை விரதம். |
| 18 | 03-09-2016 | சனி | மறைஞான சம்பந்தர் குருபூசை. |
| 19 | 04-09-2016 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு. |
| 20 | 05-09-2016 | திங்கள் | விநாயக சதுர்த்தி விரதம் |
| 23 | 08-09-2016 | வியாழன் | ஷஷ்டி விரதம், குலச்சிறை நாயனார் குருபூசை |
| 25 | 10-09-2016 | சனி | ஆவணி மூலம், குங்கிலியக் கலைய நாயனார் குருபூசை. |
| 26 | 11-09-2016 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு. |
| 29 | 14-09-2016 | புதன் | பிரதோஷ விரதம். |
| 30 | 15-09-2016 | வியாழன் | நடேசரபிஷேகம் |
| 31 | 16-09-2016 | வெள்ளி | பூரணை விரதம். |

## துர்முகி வருடம் புரட்டாதி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | 17-09-2016 | சனி | மாதப்பிறப்பு, புரட்டாதிச் சனி, மஹாளய பட்ச ஆரம்பம். |
| 03 | 19-09-2016 | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி விரதம், உருத்திரபசுபதி நாயனார் குருபூசை. |
| 05 | 21-09-2016 | புதன் | கார்த்திகை விரதம். |
| 06 | 22-09-2016 | வியாழன் | திருநாளைப்போவார் நாயனார் குருபூசை. |
| 08 | 24-09-2016 | சனி | புரட்டாதிச் சனி. |
| 12 | 28-09-2016 | புதன் | பிரதோஷ விரதம். |
| 13 | 29-09-2016 | வியாழன் | அருணந்தி சிவாசாரியார் குருபூசை. |
| 14 | 30-09-2016 | வெள்ளி | அமாவாசை விரதம், மஹாளய பட்ச முடிவு. |
| 15 | 01-10-2016 | சனி | புரட்டாதிச் சனி, நவராத்திரி விரதாரம்பம். |
| 18 | 04-10-2016 | செவ்வாய் | சதுர்த்தி விரதம். |
| 21 | 07-10-2016 | வெள்ளி | ஷஷ்டி விரதம். |
| 22 | 08-10-2016 | சனி | சரஸ்வதி பூசை ஆரம்பம், புரட்டாதிச் சனி. |
| 24 | 10-10-2016 | திங்கள் | ஏனாதி நாயனார் குருபூசை, மகாநவமி சரஸ்வதி பூசை. |
| 25 | 11-10-2016 | செவ்வாய் | விஜயதசமி, கேதாரகௌரி விரதாரம்பம். |
| 27 | 13-10-2016 | வியாழன் | பிரதோஷவிரதம், நரசிங்கமுனையரைய நாயனார் குருபூசை. |
| 28 | 14-10-2016 | வெள்ளி | நடேசரபிஷேகம். |
| 29 | 15-10-2016 | சனி | பூரணை விரதம், புரட்டாதிச் சனி. |

# திருகோணமலை சிவத்தல காட்சிகள்.






கன்னியா வெந்நீருற்று, சிவன் கோயில்.

திருக்கோணேஸ்வரர் ஆலயம்







திருக்கரைசையம்பதி, கங்குவேலி
அகத்தியர் ஸ்தாபன சிவன் ஆலயம்











தம்பலகாமம், ஆதி கோணேஸ்வரர் ஆலயம்

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில்
14-05-2016 அன்று நடைபெற்ற
“சமயகுரவர் வாழ்விற் கண்ட அற்புதங்களும் சான்றுகளும்”
நூல் அறிமுக விழா காட்சிகள்.



இவ்விதழ் கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால்
Sharp Graphics(Pvt.) Ltd. இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.